# மாணிக்கம்



வைகாசி-ஆனி-75

புதிய அல்லி மாத இதழ்

விலை ரூ. 1/25

ஆசிரியர்: திருமதி சரோஜினி கைலாசபிள்ளை, B.Sc. (யா)

நாடெங்கிலும் உள்ள சிறுவர் சிறுமியர்
படித்து மகிழ்கிறார்கள், குதூகலிக்கிறார்கள்.

# மதனன்

- ☆ சிறப்பான சிறுவர் சிறுகதைகள்
- ☆ கரும்பான கவிதைகள்
- ☆ சித்திரத் தொடர்கதை...
- ☆ உலக அற்புதங்கள்
- ☆ கண்ணுக்கு விருந்தான வண்ணஓவியங்கள்

ஆகியவற்றுடன் இன்னும் பல சுவையான
கருத்துக் குவியல்களுடன் உங்களைத்தேடி

# மதனன்

மாதந்தோறும் மகிழ்ச்சியோடு வருகிறான்!

பக்கங்கள் 48     விலை ரூபா 1/-

பிறருக்கு ஒளி வழங்குவதில் பிரதியுபகாரம் எதிர்பாராது தனதுகடமையை செய்து பெருமை அடைகிறது மெழுகுவர்த்தி,

சந்தணம் கரைந்தும் ஊதுபத்தி மணம் கொடுத்தும் தியாகநிலை அடைகின்றன. பெருமை பெறுகின்றன.

இது மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ இயற்கையின் படைப்புகள் தன்னலங்கருதாது பிறருக்காகவே உலகில் தோன்றி வாழுகின்றன. ஆனால் இவைகள் யாவற்றையுமே மிஞ்சக் கூடிய ஒரு பொது நல நோக்கம் கொண்ட சமூகம் ஒன்று உண்டு... அது தான் இலக்கிய உலகம். ஆம்... மெழுகு வர்த்தியைவிட, ஊதுபத்தியைவிட, சந்தனத்தைவிட, பெருமளவில் பத்திரிகைகள் சமூகம், அதாவது இலக்கிய உலகம் தன்னலங்கருதாது பொதுப் பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்து அந்த சேவைகள் மூலம் நிலையான ஒரு புகழ் பெற்று, பெருமை பெறுகின்றன.

இயற்கையின் படைப்புகளை எல்லாம் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் மனித குலத்தின் ஒரு அறிவுத்திறனுடன் கூடிய சமூகத்தினர் இலக்கியப் பணிகளால் புரிகின்ற போற்றற்கரிய செயல்கள் எல்லாம் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பின்பற்றத் தூண்டுகின்றன.

வானம் மழை தருவதால் பூமிக்கு லாபம். வானத்திற்கு அல்ல. இனிக்கும் தேனால் மனிதனுக்குத்தான் லாபமே தவிர அதை சேகரித்து தரும் தேனீக்கு அல்ல. இதைப்போல் பிறரை நல்வழிப் படுத்த உதவும் பத்திரிகைத்துறையின் எழுத்துப்பணி மூலம் வாசகர்களுக்கே நன்மையும் லாபமுமே தவிர அந்தப் பணிக்குள்ள தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் எந்த ஒரு துறைக்குமே அல்ல.

ஆனால் இங்கு ஒரு பெரியவித்தியாசம்...!

பத்திரிகைத்துறையுள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்ட மனித சமுதாயத்தைத் தவிர்த்து ஏனைய இயற்கை சக்திகள் யாவற்றிற்கும் அவைகள் தயங்காது தொடர்ந்து இயங்கி வருவதற்கு போதுமான ஆதரவு உதவிகள் தாராளமாக ஆனால் இவவசமாக அவைகள் எதிர்பார்ப்பதற்கு முதலாகவே கிடைத்து வருகின்றன. அதாவது மழை பொழிவதற்குசூரியனின்வெப்பம் உதவி புரிகிறது. தேன் ஊறுதற்கு மலர்களிலே ஒரு வகை சுரப்பி இயற்கையாகவே அமைந்துள்ளது. இதைப்போல இயற்கையின் சக்திகள் அனைத்திற்குமே இயற்கையின் பிறிதொரு சக்திகள் 'உதவி' வருகின்றன. ஆனால்...

# சொல்லத்தான் நினைக்கிறோம்

பிறருக்காக சேவை புரிய நினைக்கும் இந்தப்பத்திரிகைத் துறையினருக்கு உதவி செய்வதற்கென்று இயற்கைச் சக்திகள் எதுவுமே இல்லை. இந்தத் துறை நிச்சயமாக முன்னேறி தனது பொதுநலத்தொண்டினை விரிவு படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் நிச்சயமாக உறுதியாக கட்டாயமாக வேறொரு 'வலிவு மிக்க' சக்தியின் உதவி வேண்டும்.

அந்தச் சக்திதான்—

"பொருளாதாரம்"

இலக்கியத் துறைஎனும் பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள எம்மால் நிச்சயமாக இந்தச்சக்தி இல்லாமல் இயங்க முடியாத நிலை பயங்கரமாக நெருங்கிக் கொண்டு வருகிறது. காரணம் விற்பனையாளர்களின் ஒத்துழையாமை. புத்தகங்கள் விற்ற பணம் எமக்கு சரியாகக் கிடைப்பதில்லை. இன்னும் எத்தனையோ பிரச்சினைகள்...!

பொருளாதார ரீதியில் மோசமான எதிர்காலத்தை நோக்கி நழுவிக் கொண்டிருக்கும் உங்கள் அபிமானசஞ்சிகை மாணிக்கத்தை நிலை நிறுத்த நாங்கள் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனல் விற்பனையாளர்களது ஒத்துழையாமையும். பத்திரிகைத்தாள் விலை உயர்வினுலும் எங்களால் இனிமேலும் சமாளிக்க முடியாத நிலை உருவாகி விட்டது. இதன் காரணமாக இந்தமாதம்முதல் உங்கள் அபிமான சஞ்சிகை மாணிக்கம் 1-25 சதம் ஆக விலை உயர்வு பெறுகிறது.

இது எங்களது இலாபத்தை எதிர்பார்த்து அல்ல. (1-60 விலையுள்ள மாணிக்கத்தை 1-25 சதத்திற்கு வழங்குவதில் என்ன லாபத்தைக் காண முடியும்?)

பத்திரிகை வெளிவருவதில் சற்றேனும் காலதாமதம் ஏற்பட்டாலும் மாணிக்கம் தரமுள்ளதாக வெளி வருவதை மாணிக்கவாசகர்கள் அறிவீர்கள்

ஓரளவேவிலையில் உயர்வு பெற்றிருக்கும் உங்கள் மாணிக்கம் தன் தரத்தில் குறையக் கூடாது என்பதில் நாங்கள் முழுக்கவனம் கொண்டுள்ளோம்.

மாணிக்கம் காலதாமதமாக வருவது குறித்து எமது வாசக அன்பர்கள் அனைவருமே பெரும் குறை கொண்டிருக்கிறர்கள் என்பது எமக்கு வந்து குவியும் மடல்களே உணர்த்துகின்றன.

பத்திரிகைத் தட்டுப்பாட்டின்காரணமாக எமது பிரசுரங்கள் குறித்த காலத்தில் வெளியிட முடியாமைக்கு வருந்துகிறேம்எனஏற்கெனவேவாசகர்களுக்கு அறியத்தந்திருந்தோம். மீண்டும் அதே பதிலைத்தான் கூறவேண்டியுள்ளது.

இந்த இடைவெளியை ஓரளவு சமாளிக்கும் மூகமாக மாணிக்கம் வைகாசி இதழையும் ஆனி இதழையும் ஒன்றுகஇணைத்து வெளியிட்டுள்ளோம்.

இந்த மாதம் மட்டுமே இந்த முறையில் மாணிக்கம் வெளிவரும் என்பதையும் எமது ஆடிமாத இதழ் தொடங்கி உரியகாலத்தில் இதழ்களை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

---

## ரந்தீர் கபூருக்கு பிடித்தது என்ன...?

இந்திப்படக்கதாநாயகர்கள் தங்கள் மனதில் படுவதை ஒளிவு மறைவின்றி வெளியிடும் தன்மையுடையவர்கள்.

ரந்திர்கபூர் தனக்குப் பிடித்த சில விஷயங்களை துணிவுடன் வெளியிடுகிறர்.

காதலிப்பது: மது - இளம் பெண்கள் - ஆங்கில நடிகை ஜீனலோலாபிரி கேடா - உணவு - தூக்கம்.

வெறுப்பது: ஒல்லியான பெண்கள்.

பயப்படுவது: என் மனைவி. (எல்லா கபூர்களையும் போல)

இருட்டு (நான் தனியாக ஒரு பெண்ணிடம் இருக்கும் நேரம் தவிர)

மறப்பது: திருமணம் முடித்ததை.

# மகளிர் மன்றம்

## பூசணி மிட்டாய்

தேவையான பொருட்கள்;

1 இருத்தல் பூசணிக்காய்
2 இருத்தல் சீனி
3 மேசைக்கரண்டி பன்னீர்
½ கோப்பை நீர்

செய்யும் முறை:

பூசணிக் காயின் தோலை நீக்கி நீளப் பாட்டிற்குத் துண்டுகளாக வெட்டி, முறியாதபடி மேசை முட் கரண்டியால் குத்தி, அகற்றக் கூடிய அளவில் நீரையகற்றி நெரிக்க வேண் டும். சீனியை பாகாய்க் காய்ச்சி அதில் பன்னீரையும் சேர்த்த பின்னர், பூச ணிக் காய்த்துண்டுகளைப் போட்டுச்சீனி ஒவ்வொரு துண்டிலும் படும்படி கிளறி அடுப்பிலிருந்து இறக்கி மேலுஞ் சிறிது நேரங் கிளறிய பின் ஒரு தட்டையான பாத்திரத்தில் ஆற வைத்து பின்னர் வெட்டிப் பரிமாறலாம்.

—எம். ஏ. மின்னு காலி

---

## ஐடியா

சுத்தமான நல்ல நெய்யின் வாசனை நெடுநாள் நீடிக்க ஒரு சிறு துண்டு வெல்லத்தைப் போட்டு வைக்கலாம்.

உணவுப் பொருட்களை இளஞ் சூட் டுடன் சாப்பிட்டால் விரைவில் ஜீரண மாகும்.

எண்ணெய் பசையுள்ள பாத்திரங் களை உபயோகப் படுத்தப்பட்ட தேயி லைத்தூளினால் விளக்கி, வெந்நீரில் கழுவினால் எண்ணெய்ப் பசை நீங்கும்.

பழங்களையும் காய்கறிகளையும் ஒரு பிளாஸ்டிக் பையில் (பொலித்தீன் பை) போட்டுக் காற்று உட்புகாமல் கட்டி வைத்தால் ஒரு வாரம் வரை பசுமை யாகவிருக்கும். அந்தப் பையைக் குளிர் சாதனப் பெட்டியில் வைத்தால் இன் னும் சில நாட்கள் கூடுதலாக பசுமை யாக இருக்கும்.

உருளைக்கிழங்கைத் தோலுடன் வேக வைத்தால் அதில் உள்ள உப்புச் சத்துக்கள் காக்கப்பட்டு அதிக பயனைத் தரும்.

கொத்தமல்லி, கீரை, கீரைத் தண்டு போன்றவை இரண்டு மூன்று நாட்கள் வரை வாடாமலிருக்க வேர்ப் பாகம் நீரில் நனையும்படி வைத்துப் பாதுகாக்கலாம். கருவேப்பிலை வாடா மல் இருக்கக் கண்ணாடிப் புட்டிகளில் போட்டு அல்லது பொலித்தீன் பைக ளில் போட்டு மூடி வைக்கவும்.

—கலையன்பன் கபூர்

# மாணிக்க விருந்து

ஒரு பெண் தன் கற்பை இழப்பதன் மூலம் ஒரு குடும்பத்தையே காப்பாற்றி உயர் நிலைக்கு கொண்டு வருகிறாள் அதனால் அவளுக்குக் கிடைக்கக் கூடிய பாவம் அதிகமா? புண்ணியம் அதிகமா?

'தீவினை விட்டு ஈட்டல் பொருள்' என்று ஔவையார் கூறி இருக்கிறார். கற்பை இழந்து பொருளை தேடுவதும், களவு செய்து பொருள் தேடுவதும், கள்ளை விற்று பொருள் தேடுவதும் ஒன்றுதான்.

நெறியல்லாத நெறியில் சென்று பொருளீட்டி அப்பொருளால் செய்கின்ற அறத்துக்குப் புண்ணியம் குறைவாகவே வரும். பெண்மணிகளுக்குக் கற்பு உயிரினும் பெரியது. கற்பிக்கப் படுவது கற்பு. கல்லைப் போன்றது கற்பு என்றும் ஒரு பொருள் உண்டு. (கல் + பூ = கற்பு) கல் பாரம் அதிகமானால் பிளந்து போகும். அது போல ஒரு பெண்ணுக்கு கற்புக்கு இடையூறு வந்தால் அவள் உயிர் பிரிந்து விடும். கல்யாண காலத்தில் கல்லை மிதிப்பதும் இந்தக் கருத்தை விளங்க வைக்கிறது. கல்லைப் போல் கற்பில் நான் உறுதியாக இருப்பேன் என்று கல்லை மிதித்து உறுதி செய்து கொள்கிறாள்.

அகலிகையின் கற்பில் சிறிது மாசு கண்ட பொழுது கௌதமர் அவளை கல்லாகுமாறு சபித்ததும் இந்த கருத்தை வலியுறுத்துகின்றது. ஆகவே ஆண்களும் பெண்களும் நெறியல்லாத நெறியில் சென்று பொருளீட்டுவதும் அதனால் குடும்பத்தை வளர்ப்பதும் தமிழ்ப் பண்பாடு ஆகாது.

ஆகவே கற்பை இழப்பதனால் பாவம்தான் அதிகம்.

'ஸரிகமபதநிஸ' என்பதற்கு என்ன அர்த்தம்?

ஸரி: நீ இந்த உலகத்தில் பிறந்தது சரி; ஆகவே பெறுதற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நீ,
கம: கம கம என்னும் வாசனையோடு; அதாவது புகழுடம்பு பெறும் வகையில் வாழ முயற்சிக்க வேண்டும். அது எப்படி?
பத: பதமாயிரு. அதாவது யாரிடத்தும் கடுமையான வார்த்தைகளை பேசி அவர்கள் உள்ளத்தை புண்ணாக்கி விடாதே!
நிஸா: நீ சாக வேண்டும்; வேறொன்றுமில்லை. எதற்கெடுத்தாலும் நான், நான் என்று சொல்லிக் கொள்ளாமல் உன்னிடத்தில் உள்ள நான் என்ற அகந்தையை அகற்றி விடு.

சங்கீத உபநியாசத்தின் போது திருவாரூரில் வாரியார் கூறியது)

தகவல்: ராணி முத்துசாமி

# சிட்டுத் தாரகை

யாழ்வாணன்

## அத்தியாயம் மூன்று

கடலை அடுத்துள்ள அந்த மீன் வாடியினகத்தே பல பூவரச மரங்கள் வறுமையென்னும் வெயிலிலும் உயிர் போகாமல் வாழும் மீனவர் போல, வருவோர் போவோருக்கு நிழலளித்துக்கொண்டு நின்றன.

அவற்றுள் ஒரு மரத்தின் அடியில் யோசேப் உட்கார்ந்திருந்தான். கடந்த இரண்டு நாட்களாக அந்தக் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிகள் மனத்தடத்தில் சிறு மீன்களாகத் துள்ளின.

இப்ப என்ன செய்வது?......

இப்படியே மனஞ்சோர்ந்து அவனும் உட்கார்ந்துவிட்டால் அக்கிராம மீனவர்களுக்கு விமோசனம் எப்போதுமே கிடைக்கமாட்டாது. சோதனையென்ற அலைகளுக்கிடையில் எதிர்நீச்சலடித்து வெற்றிக்கம்பத்தை நோக்கிச் செல்லவேண்டும்.

"உண்மைக்காக உயிர்போகலாம். ஆனால் பொய்யை வெல்வதற்கு மனிதன் உயிருடன் இருந்துதானே ஆகவேண்டும்?" இப்படி அவனை வளர்த்து ஆளாக்கிய சுவாமி கூறுவார்.

தங்கையின் கலியாணத்திற்கென குருவி சேகரித்ததுபோலத் தாயார் சிறுகச் சிறுக சேமித்து வைத்திருந்த பணத்தையெல்லாம் தன்னுடைய இலட்சிய வேள்வியை வளர்க்க எரித்து விட்டதைப் பற்றி அவன் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. ஆனால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற நம்பிக்கையோடு, எத்தனையோ எதிர்ப்புக்களைச் சமாளித்துத் தன்னைப் பின்பற்றிவரும் நண்பர்களின் எதிர்காலம் ......?

காலமெல்லாம் இந்தக் கிராமத்திலுள்ள மீனவர்கள் இன்னொருவரின் கையை எதிர்பார்த்து நிர்ப்பந்தப்பட வேண்டுமென்ற விதியை மாற்றிவிட முடியாதா?

எந்தவித எதிர்ப்புக்களானாலும், சமாளிக்கும் திறன் வேண்டும்.

நான் ஒருவன் மட்டும் அந்த வழியிற் சென்றுகொண்டிருந்தால் போதுமா?

சோதனைகளைக் கண்டு பயிற்சி பெறாத தோழர்கள் சோர்ந்து விட்டால்......

"ஐயோ!..." நினைக்கவும் பயங்கரமான இந்தக் கேள்விகள் அவனது நெஞ்சைக் கசக்கிருமிகள் போல் அரித்தன.

"அடிமையான நிலையிலும், அடிதடி சண்டையின்றி வாழ்ந்த சேரியில், இப்படியொரு சூழ்நிலையுருவாகி விட்டதற்குக் காரணம் இந்தப் பொடியன் யோசப்புத்தான்".

"ஏதோ அந்த யேசுவின் சோதனைப்படி நடக்கட்டுமென்றிருக்காமல், இந்தப் பெடியளுக்கு இந்தக் கூத்து ஏன்?"

எனச்சில வயோதிபர்கள் அவனைத் திட்டிப் பேசுவதும் அவன் காதிற் கேட்காமல் இல்லை.

அதைக் கேட்டு அவன் கோபப் படவில்லை. சிரிக்கவும் இல்லை. அவர்களுக்காக அனுதாபப்பட்டான். ஆபிரகாம் லிங்கன், முதலில் அடிமைகளை விடுதலை செய்ய முயன்றபோது அடிமைகளே அதனை எதிர்த்தார்களாம்.

வெறும் அனுதாபம் அவர்களுக்கு விமோசனம் தருமா?

'தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும்'... என்ற அமுத மொழி அவன் நினைவிற்கு வந்தது.

அவன் சிந்தனை வயப்பட்டிருந்தாலும் தற்போது எழுந்துள்ள சிக்கல்களை எப்படி அவிழ்ப்பது என்ற கருத்துக்கள் நெஞ்சத்தில் குமிழியிட்டன.

● ● ●

மதிய நேரம் கடந்து விட்டது. உச்சி வானினின்றும் சறுகிய ஆதவன் நோயாளிக் கோலத்துடன் அடிவானம் நோக்கி இறங்கிக் கொண்டிருந்தான்.

வேக்காட்டின் கொடுமை அவனைப் பொறுத்த அளவில் தீர்ந்துவிட்டது. ஆனாலும் மனதின் வேக்காடு?...

இதுவரை காலமும் நடைபெறாதது அன்று நடைபெற்றுவிட்டது.

அன்று காலை, கடற்கரைக்குப் பொலிஸ் வான் வந்து மரியதாசை விசாரித்து அவனைக் கைது செய்து கொண்டு சென்றதும் அவன் நெஞ்சை ரம்பமாக அறுத்தது. அவனுக்காக மரியதாஸ் படும் தொல்லைகளை எண்ணி வருந்தினான்.



மரியதாஸ் எதிலும் துணிச்சலுள்ளவன். படபடவென மற்றவரை எறிந்து பேசினாலும், சுபாவத்தில் இனியவன். நல்லவன். அவனை நம்பித்தானே யோசேப். கிராம மீனவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கும் இலட்சிய வேள்வியை ஆரம்பித்தான். யோசேப்பின் வலக்கரம் போன்று விளங்கிய அவன், சதிகாரர்களின் திட்டத்தினால் பொலிஸ் 'லொக்கப்'பில் அடைக்கப்பட்டுள்ளான்.

சந்தர்ப்பம், சூழ்நிலை அவனைச் சந்தேகப் பேர்வழியாக ஆக்கிவிட்டன.

மரியதாசைப் பொலிசிலிருந்து பிணையெடுக்க வேண்டும். ஆனால் அந்த விவகாரங்களில் அவனுக்கு அனுபவ மில்லை. என்றாலும் யாரையும் பிடித்து முயற்சி செய்து மரியதாசைப் பிணை யெடுக்க வேண்டுமெனத் தீர்மானித் துக் கொண்டான்.

அவனை வளர்த்து மனிதனாக்கிய சாமுவேல் பாதிரியார் அவனுக்கு ''சோதனைகள் நாம் எதிர்பார்ப்பவை களல்ல. திடீரெனத் தோன்றுவன. அவற்றை வெற்றிகொள்வது மனித மனத்தின் உறுதியில்தான் தங்கியுள் ளது'' எனப்பலமுறை கூறியுள்ளது அச்சமயத்தில் ஞாபகத்திற்கு வந்தது.

அதுவரை அமைதியாக அடங்கிக் கிடந்த கடலலைகள் ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிட்டன. அப்பப்பா! எவ் வளவு பாரிய அலைகள். சற்று நேரம் அவ்வலைகளைப் பார்த்தபடி நிற்கின் றான்.

வீட்டிற்குச் சென்று ரோசம்மா, லூர்த்தம்மா ஆகியோரின் நைந்த உள் ளத்தை மேலும் நோகப்பண்ண விரும் பாது, கிழக்கு நோக்கி நடந்தான்.

கடலையடுத்து மணல் வெளியில் காலடி பதித்து நடக்கின்றான். மன தில் எந்தவிதமான குறிக்கோளுமற்ற வனாக — என்ன செய்வது இனி என்ற பிரச்சினைகளுக்கு முடிவு காண முடி யாத நிலையில், நடக்கின்றான்.

மணல்மீது ஆங்காங்கு கிடந்த காய்ந்த சிப்பிகளும், ஊரிகளும் கால டியில் அகப்பட்டு, அவற்றுள் ஒன்று அவனது பாதத்தில் குத்திவிட்டது.

காலில் வழியும் இரத்தம் வெண் மணற்கோட்டில் கறைகளாகியுள்ள போதிலும்... குனிந்து அக்காயத்தினை ஒரு துண்டினால் கட்டிவிட வேண்டு மென்பது கூட அவனுக்கு நினைவிற்கு வரவில்லை.

மணல் வெளிக்கப்பால்...

வழியெங்கினும் முள்ளிப்பத்தை களும், ஈச்சம் செடிகளும், நாகதாளி களும், சில மனிதருடைய மனதில் அப்பிக்கொண்ட அழுக்காறு போல, மண்டிக் கிடந்தன....

☆ ☆ ☆

முள்ளிப் பற்றைகள் கழிந்துவிட் டன.

கடற்கரையை மருவிய தாளக் குடா. யோசேப் தான், கிராமத்திலி ருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் வந்துவிட்டதை உணருகின்றான்.

இந்தப் பிராந்தியத்தில் மனித நடமாட்டமே குறைவு.

அங்கு அட்டை பிடிக்கும் காலங் களில் தான் சில மீனவர்கள் தங்கு வார்கள். ஏனைய நாட்களில் மனித நடமாட்டம் அற்ற சூனிய வெளியா கவே அந்த இடம் காட்சி அளிக்கும்.

யோசேப், கருத்தற்ற நிலையில், அங்கே நின்று கொண்டிருந்தான். கடல் வளைந்து குடாவாகிய அந்த இடத்தில் ஓர் அந்தத்தில் ஒரு சிலரின் நடமாட்டம் அவனது கண்களுக்குப் புலப்பட்டது. மஞ்சள் வெயிலுக்கு மறைவாக, கையை வளைத்துப்பிடித்து மேலும் அவ்விடத்தை உற்று நோக்கி னான்.

இந்த வேளையில் இவர்களுக்கு இங்கு என்ன வேலை?

கள்ளக்கடத்தல் காரர்களாக இருக்குமோ? என்ற ஐயப்பாட்டுடன் மேலும் உற்றுப்பார்க்கின்றான்.

ஒன்றுமே தெளிவாகப் புலனாக வில்லை.

அருகே சென்று பார்க்க வேண்டு மென்ற ஆவல்...

‘இளங்கன்று பயமறியாது’ என்பது போல அவனும் வாலிபனல்லவா?

அத்திசை நோக்கி விரைகின்றான்.

அங்கே—

சவேரியானின் கையாளான ராபேலும், இன்னும் சிலரும் முடாவொன்றில் கள்ளை வைத்து அருந்திக்கொண்டிருக்கின்றனர். அருகே சுடப்பட்ட நண்டுக்கோதுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கின்றன.

கலவரம் கேட்டு, கள் அருந்திக்கொண்டிருந்தவர்கள் திரும்பிப் பார்க்கின்றனர்.

யோசேப் தங்களை நோக்கி வருவதைக் கண்ட ரபேலும் மற்றவர்களும் அவன் தங்களைக் கண்டுவிட்டானே என்ற அச்சத்தினால் ஏற்பட்ட ஆத்திரத்துடன் எழுந்து அவனை நோக்கி முன்வந்தனர்.

“அடே! பொறுக்கி, உனக்கு இங்கு என்னடா வேலை? உன்னுடைய நாட்டாண்மையை ஊருக்குள்ளேயுள்ள நோஞ்சான் பயலுகளிட்டை வைத்துக் கொள். என்னிடம் உந்தப் பருப்பு அவியாது” என்றபடி ராபேல் அவனை நெருங்குகின்றான்.

“நாங்கள் இங்கை வந்தனாங்களெண்டு யாரடா உனக்குத் துப்புச் சொன்னவங்க?” என்று தொடர்பற்றுப் பேசியபடி ஒருவன் யோசேப்பைப் பின்னுக்குத் தள்ளுகிறான்.

எதிர்பாராமல் நடந்துவிட்ட நிகழ்ச்சியால் கீழே விழப்போன யோசேப், ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு “நான் சும்மா காலாற வந்தனான்” என அமைதியாகக் கூறினான்.

“சும்மா வந்தனியோ? தோணியை நாங்கள் இழுத்துக் கொண்டு வந்துவிட்டமென்று யாரரோ பொறுக்கியள் உனக்குச் சொல்லி விட்டாங்கள். அதுதான் நீ வந்தனீ. நீ திரும்பிப்போற கெட்டித்தனம் பார்ப்போம் என்றான் ராபேல்.

யோசேப்பிற்கு இப்போது தான் உண்மையை ஒருவாறு உணர முடிந்தது. அதிர்ஷ்டம் என்பது எல்லோ

## ‘இன்பச்சிலை’

க்ஷணநேர இன்பத்தை ஒரு சிலையாக வடிக்க வேண்டுமென்று ஒருநாள் மாலை அவன் உள்ளத்தில் ஆசை எழுந்தது. வெண்கலத்தைத் தேடி அலைந்தான் அவன். வெண்கலத்தின் மூலமே அவனால் சிந்திக்க முடியும். ஆனால் உலகத்தின் வெண்கலம் முழுவதுமே மறைந்து விட்டது. “நிரந்தர தூக்கம்” என்ற சிறையில் உள்ள வெண்கலத்தைத் தவிர உலகத்தில் எந்த இடத்திலும் எந்த வெண்கலமும் காணப்படவில்லை.

இந்தச் சிலையை அவனே தன் கையால் வடித்து தன் வாழ்க்கையில் தான் காதல் கொண்ட ஒன்றின் கல்லறையின் மீது நிறுவி இருந்தான். தான் மிகவும் காதலித்த ஒன்றின் கல்லறைமீது தானே வடித்த இந்தச் சிலையை அவன் அமைத்ததன் நோக்கம் மனிதனின் இறவாத காதலிக்கும் மனிதனுடைய நிரந்தரத் தூக்கத்திற்கும் அது ஒரு சின்னமாக விளங்கவேண்டும் என்பதே. உலகம் முழுவதிலும் இந்தச் சிலையின் வெண்கலத்தைத் தவிர வேறு வெண்கலம் கிடைக்கவில்லை. “நிரந்தர தூக்க”ச் சிலையின் வெண்கலத்திலிருந்து “கணநேர இன்ப”ச் சிலையை அவன் உருவாக்கினான்.

மூலம்: ஆஸ்கார் ஒயில்டு
தமிழில்: அமரர் கு. அழகிரிசாமி
தொகுத்தவர்: விஜயா ஜெகநாதன்

ருக்கும் எப்போதும் எட்டாமலிருப்பதில்லை என எண்ணிக்கொண்டான்.

மனநிம்மதியற்ற நிலையில், கால்கள் போனவாறு நடந்துவந்த அவன் கடந்துபோன சம்பவங்களின் காரண காரியங்களுக்கும் இவர்களுக்கும் நிறையத் தொடர்புண்டு என்பதை அறிய நேர்ந்துவிட்டதில் திருப்தியடைந்தான். இதனால் அவனது உள்ளத்தில் மீண்டும் தோணி கிடைத்து வெள்ளோட்டம் ஓடுவது போன்ற பிரமை ஏற்பட்டது. ஆனால் அவனது எண்ணங்கள் வெறும் கற்பனையாகவே நின்று விட்டன.

திடீரென ராபேல், யோசேப்பைத் தாக்குகின்றான். மற்றவர்களும் அவனைப் பின்பற்றித் தாக்குகின்றனர்.

தன்னந்தனியனாக நின்ற யோசேப்பினால், அவர்களது தாக்குதல்களைச் சமாளிக்க முடியவில்லை. ''ஐயோ! அம்மா, லூர்த்தம்மா'' எனக்குரலெழுப்பியபடி தரையில் மயங்கி விழுந்தான்.

''டேய், இவன் செத்துப்போனான் போலே. இவனை இங்கு விட்டால் எங்களுக்கு ஆபத்து. கழுத்துக்குக் கயிறுதான் வரும். இவனைத்தூக்கி தாளங்குடாப் பற்றைக்குள் எறிந்துவிட்டு நாங்கள் போவோம்'' என்றான் ராபேல்.

அந்திப்பொழுது மறைந்து கருக்கல் பொழுது அரும்பிவிட்டது. பொட்டல் வெளிகளைத் தேடிச் சென்ற பறவைகள் பிலாக்கணமிட்டபடி கூடுகளை நோக்கிக் கூட்டங்கூட்டமாக விரைந்து கொண்டிருந்தன. இருள் அழுக்குச் சிறுகச்சிறுகப் பரவத் தொடங்கியது...

எங்கும் மரண அமைதி.

ராபேலும், நண்பர்களும் மயங்கிக்கிடந்த யோசேப்பை, இறந்துவிட்டான் என்ற எண்ணத்தில் தூக்கிக் கொண்டு தாழம்பத்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்களது உள்ளத்தில் அச்சம் ஆக்கிரமித்துக் கொண்டது.

இருளாகிய அழுக்கைக் கழுவ முனைவதுபோல வானில் சில நட்சத்திரங்கள் தோன்றின. கடலில் உள்ள கலங்கரை விளக்கும் சுழன்றுகொண்டிருந்தது.

(யாழ்வாணனைத் தொடர்ந்து கே. வி. நடராசன் எழுதுகின்றார்)

---

## கவிதைகள் பற்றி...

தொகுப்பு:
விஜயா ஜெகநாதன்

- எவனாயினும் கவிதைக்கு செவி சாய்க்க இயலாதவன் மனிதப் பண்பு இல்லாதவனே. (கதே)
- கவிதை வடிப்பது இயற்கையிலா செயற்கையிலா என்று என்னிடம் பலர் கேட்கிறார்கள். இரண்டும் இணைபிரியா நிலையில் சேரும்பொழுதே கவிதை எழும் என்பேன். (கொரேசு)
- கவிதை என்பது பேசும் ஓவியம். ஓவியம் என்பது பேசாத கவிதை. (சைமனடீசு)
- கவிதைக்கு உள்ளத்தை உணர்த்தும் சக்தி இருப்பதால் அதை கடவுட் தன்மை வாய்ந்தது என்பேன். (பேக்கன்)
- கவிதை என்பது காதலின் மகள். (பாண்டனெல்)
- கவிதையிலும் நீநிவாழ் கற்சின்னங்கள் கிடையாது. (ஷேக்ஸ்பியர்)

# மாணிக்கக் களஞ்சியம்

தமிழன் வரலாறு என்றுமே தனித்துவம் மிக்கது. வேறு எந்த இனத்துடனும் ஒப்பிட முடியாத சிறப்புமிக்க குணுதிசயங்களைக் கொண்டது. மொழி, அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், இலக்கியம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவற்றின் வளர்ச்சிக்காக பெரும் தொண்டுகள் புரிந்த சிற்பிகள் எத்தனை எத்தனை பேர்? வரலாற்றுப் புகழ்கொண்ட நிகழ்ச்சிகள் எத்தனை? கலையும் கல்வியும் வளர்த்த பெரும் ஆலயங்கள் எத்தனை?

இன்றைய தமிழன் அவற்றையெல்லாம் எண்ணி நெஞ்சை நிமிர்த்தலாம். காலமெல்லாம் தன் சந்ததியினருக்கு எடுத்துரைக்கலாம்.

ஆனல்—

தன்னைச் சுற்றிலும் நடைபெற்ற— நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்துவிட முடியாது. அறிந்து வைத்திருக்கும் ஒரு சிலவற்றைக் கூட அவனுல் நினைவில் வைத்துக்கொள்வது முடியாதகாரியம்.

ஒரு உதாரணம்: ஈழத்தின் பெருமைமிக்க கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள், முக்கிய பிரமுகர்கள் அனைவரையும் எமது கலைவிழாவுக்கு அழைப்பதற்காக எமக்கு அவர்களது முகவரிகள் தேவையாக இருந்தன. அவற்றைப் பெறுவதற்காக நாம் 'வரதர்' வெளியீடான பலகுறிப்பு பிரதி ஒன்றினைப் புரட்டினேம்.

ஆனல் துரதிர்ஷ்டவசமாக, இறுதியாக வெளிவந்திருந்த அப்பிரதியில் குறிப்பிட்டிருந்த முகவரிகளில் பல மிகப்பழையதாக இருந்தன. பிரமுகர்களில் பலர் இறந்தும் விட்டிருந்தனர். பல இலக்கிய கர்த்தாக்கள், பிரமுகர்களின் பெயர்கள் இடம் பெற்றும் இருக்கவில்லை. இப் பிரசுரத்தைத் தவிர இதைப்போன்று வேறு எதுவுமே தமிழில் வெளிவரவில்லை. இது மிக வருந்தத்தக்க விஷயம்.

உதாரணமாக ஆங்கிலத்தில் எவ்விடயம் பற்றியாவது அறியவேண்டுமானல் பேர்குஸன் டைரக்டரியை (FERGUSAN DIRECTORY) புரட்டலாம். சிங்கள மொழியிலும் அதே போன்ற பொக்கிஷங்கள் வருடம் தோறும் வெளிவருகின்றன. ஆனல் தமிழினத்திற்கு இப்படியான ஒன்று இல்லையே என்று நினைத்தபோது எமது நெஞ்சம் வேதனை அடைந்தது.

இலக்கியத்துறையில் ஓரளவு ஈடுபட்டுள்ள எம்மாலேயே இவ்விஷயங்களை அறிந்து கொள்ள முடியாதபோது, ஒரு சாதாரண மனிதன் எத்தகைய சிரமத்திற்குள்ளாவான் என்பதையும் உணர்ந்தோம்.

நாமே இந்த முயற்சியில் ஈடுபட்டால் என்ன என்னும் அவா ஏற்பட்டது. மாணிக்கம் மதனன் மற்றும் மாணிக்கப் பிரசுரங்கள், மாணிக்கக் கலண்டர்கள் ஆகியவற்றை வெளியிடும் எமக்கு ஆதரவினை அளிக்கும் தமிழ்மக்கள், இவ்விஷயத்திலும் பரிபூரண ஆதரவை அளிப்பார்கள் என்னும் நம்பிக்கை மட்டுமல்ல — தமிழனின் தனித்துவம் மிக்க உலகில் தலை நிமிர்ந்து நிற்க உதவும் இந்த முயற்சிக்கு போதிய உதவி அளிக்க எந்தத் தமிழனும் பின் வாங்கமாட்டான் என்னும் நம்பிக்கையும் எமக்கு உண்டு.

மாணிக்கக் களஞ்சியம் என்னும் பெயரில் நாம் வருடம்தோறும் வெளியிட உத்தேசித்திருக்கும் இப்பொக்கிஷத்தில் நாம்அமைக்கவிருக்கும்சிறப்பு அம்சங்கள் மிகப் பல.

● கல்வி, மொழி, அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், இலக்கியம், மருத்துவம், வர்த்தகம். சமயம், சமூகம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பத்திரிகை ஆகிய துறைகளில் பெரும் பணியாற்றிய தமிழ்ப் பெரியார்களின் பெயர்கள், சாதனைகள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவை.

● ஒவ்வொரு ஊரிலுமுள்ள கோவில்கள், கிறீஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், ஆகியவற்றின் படங்கள் வரலாறுகள், அவற்றின் ஆரம்பகர்த்தாக்கள், தர்மகர்த்தாக்கள், வழிபாட்டு உற்சவ தினங்கள், மற்றும் புகழ்பெற்ற சம்பவ நிகழ்ச்சிகள் ஆகியவை.

● பாடசாலைகள், கல்விக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள், மருத்துவர்கள், சனசமூக கிராம முன்னேற்ற நிலையங்கள் — அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட — பாடுபட்டுவரும் சேவையாளர்கள் ஆகியோரது விவரங்கள்.

● கிராமியக் கலைஞர்கள் மற்றும் முத்தமிழ் வல்லுநர்கள், இலக்கிய மேதைகள் பட்டதாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என்பவர்கள் பற்றிய விவரங்கள்.

— ஆகியவற்றையும்

இன்னும் பல சிறப்பு அம்சங்களையும் அதிக அளவு புகைப்படங்களுடன் அகரவரிசைப்படி — ஊர் வாரியாக — தொகுத்து தமிழினத்துக்குப் பெருமை தேடித்தரும் பொக்கிஷமாக வெளியிட வேண்டும் என்பது எமது பேரவா...

இப்பணிக்கு பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து விடயங்களைச் சேகரிப்பது மட்டுமல்ல இதற்காக பல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவேண்டிய நிலையும் ஏற்படும்.

மாணிக்கத்தின் மீது அக்கறை கொண்டு எமக்கு அவ்வப்போது பேராதரவினை வழங்கி வரும் அபிமானிகள் அனைவரும் இதனை வெளியிடுவதற்கு தமது ஒத்துழைப்பை வழங்குவது மட்டுமல்ல, இப்பெரும் பணிக்கு ஏற்படும் பொருட்செலவில் ஒரு பங்கினையாவது பொறுப்பேற்க வேண்டுமென தமிழின் மீதுள்ள அபிமானத்தால் கேட்கின்றோம்.

இப்பணிக்கு நாம் குறைந்தபட்சம் ஆரம்பத்தில் **30,000** ரூபாய்களுக்கு மேல் செலவிட வேண்டியிருக்கும்.

வர்த்தகப்பிரமுகர்களிடமிருந்து விளம்பரங்கள், தமிழ் அபிமானம் கொண்டோரது நன்கொடைகள், தமிழ் எம். பிக்களின் பேருதவிகள், எமது கௌரவ அமைச்சர் அரசினரிடமிருந்து பெற்றுத்தரவேண்டிய ஆதரவு என்பன மட்டுமன்றி ஒவ்வொரு தமிழ்மகனும் தன்னால் முடிந்த அளவு பொருள் உதவி போன்றவற்றையும் அளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

இவை மட்டுமல்ல, இலங்கையிலுள்ள தமிழ்த்தினசரிகள், வார ஏடுகள், மாதசஞ்சிகைகள் போன்றவை இம்முயற்சிக்கு தாராள மனத்துடன் அவ்வப்போது உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதே வேளையில் —

எமது வாசகர்கள், தமது உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு 'மாணிக்கக் களஞ்சியம்' பற்றிய விவரங்களை எடுத்துரைப்பதுடன் நின்றுவிடாது, அதனை பெரும் பொக்கிஷமாக நிறைவேற்றுவதிலும் அக்கறை கொள்ளவேண்டுமென்பது மிகமுக்கியம். இதில் தற்பொழுது அமைக்கப்படும் மாணிக்கக் கழகங்களும் பெரும் பங்கினை ஆற்றலாம்.

இன்னும் ஒன்று —

இதனை வெளியிடுவதற்கு அதிக தகவல்களைத் தந்து அக்கறையுடன் செயல்படும் வாசகர்கள், அபிமானிகள் மற்றும் இக்களஞ்சியத்தை உருவாக்க இயன்ற அளவு பொருளுதவி செய்யும் அன்பர்கள் ஆகியோரது பெயர்கள் போன்றவை மாணிக்கக் களஞ்சியத்திலும் மாணிக்கம், மதனன் இதழ்களிலும் வெளியிடப்படும்.

வாசகர்கள், அபிமானிகள் அனைவரும் மாணிக்கக் களஞ்சியம் பற்றிய தமது அபிப்பிராயங்களையும், வேறு என்ன விடயங்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆலோசனைகளையும் காலதாமதமின்றி உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**மாணிக்கக் களஞ்சியம்**
**29, கல்யாணி வீதி,**
**கொழும்பு-6.**

சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச்
சேலையடி.....



# கைத்தறி

உத்தரவாதம் பெற்ற
ஆடைகளின் சின்னம்

- ஷேர்ட்டிங்
- வேஷ்டி
- சாரம்
- சாரி

முதலியவற்றின்
முன்னணி உற்பத்தியாளர்கள்

## சிவகுமார மில்ஸ்

15/5. சாந்தி ரோட், ஹெந்தளை, வத்தளை.

தலைமை
அலுவலகம்.
'என் கே'
140. ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு-13
தொலைபேசி
:32988

## கே. எஸ். ஆனந்தன்

**(3)**

அந்த அதிசயத்தை நினைக்க அவள் உள்ளம் வியப்பால் வியர்த்துக் கொட்டியது. துதிக்கையை உயர்த்திய படி பிளிறிக்கொண்டு ஓடிவந்த வாரணம் காசியப்பாவை நெருங்கியதும் அமைதி பெற்று நின்றதும், அவனை துதிக்கையால் அணைத்து தூக்கிவைத் திருந்தபடியே மீண்டும் பிளிறியதும், பின்பு விட்டுவிட்டு திரும்பி ஓடியதும் அதிசயப்படக் கூடிய நிகழ்ச்சிகள் தானே. ஏதோ மந்திரக் காட்சி போலத் தோன்றிற்று அவனைப்பெற்ற அன்னைக்கு. மகனின் தலையைக்கோதி விட்டவாறே ''காசியப்பா, நீ சாதா ரண மனிதப்பிறப்பல்லடா கண்ணே'' என்றாள்.

''அம்மா, ஊரே காசியப்பனைக் காணதிரண்டு வந்திருக்கிறது'' என்றாள் நந்தாவதி.

அதிசயிக்கத்தக்க அந்த நிகழ்ச்சி யினால் அந்த ஊரே காசியப்பனிடம் ஒருவித பக்தி கொண்டுவிட்டது. புரட்சிக் கூட்டத்தின் தலைவனான தாது சேனனுக்கு மேலும் ஆதரவு பெருகி விட்டது. காசியப்பாவின் மதிப்பு சிறு வயதிலேயே மேலோங்கி விட்டது. அவனை ஓர் அவதாரக் குழந்தை என்றே எண்ணிவிட்டனர் மக்கள்.

அதே வேளையில் இராசரட்டை அரண்மனை கோட்டைக்குச் சமீபத்தில் கூடாரமிட்டிருந்தான் தாதுசேனன். அன்று நிகழ்ந்தயுத்தத்தில் தாதுசேனன் பெரும் வெற்றியீட்டியிருந்தான்.

மறுநாட்காலை நடாத்த வேண் டிய முற்றுகைபற்றி முக்கிய தலைவர் களிடையே ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. சிறுசிறு கூடாரங் களுக்கு மத்தியிலுள்ள கூடாரத்தில் தான் ஆலோசனை நடந்துகொண்டி ருந்தது. மற்றும் நான்கு தலைவர்களை

யும் பார்த்து ''இன்று நம் வாழ்க்கையில் மறக்க முடியாத பெரும் யுத்தமே நடாத்தியிருக்கின்றோம். நாளை விடிந்ததும் மீண்டும் போர் தொடங்கும்பொழுது அவர்கள் எதிர்பாராத விதமாக படையை பின்னடித்துச் சென்று பின்பு முன்னேறித் தாக்குதல் வேண்டும். நாளை இராஜரட்டைக் கோட்டை வாசலில் எமது வெற்றிக் கொடி பறக்க வேண்டும். ஆமாம் ஈழத்தின்வரலாற்றில் நாளைய நிகழ்ச்சி ஓர் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும்'' என்று முழங்கினான்.

காலைச் சூரியன் குடதிசை வானில் எழில் கோலமிட்டு எழுந்து கொண்டிருந்தான். இராஜரட்டைக் கோட்டைக்கதவுகள் பூட்டப்பட்டவை மீண்டும் திறக்கவேயில்லை. பிணக்காடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் போர்க்களத்தின் பயங்கரத்தைக் கண்டு மலைத்து நின்றது இராஜரட்டைக் கோட்டை. காலையில் வீசும் இளந்தென்றலில் இரத்த வாடையும் கலந்து துர்மணம் வீசியது.

வில்லேந்திய வீரர்களும், ஈட்டி எறியும் தீரர்களும், எறிகுண்டுகளும், தீப்பந்தங்களும் வீசும் திடசித்தம் கொண்டவர்களுமாக கோட்டையின் மேல் பகுதியில் வந்து குழுமிவிட்டனர். எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்கும் வேலையில் அவர்கள் கோட்டைக்குள்ளிருந்தே தாக்குதல் நடாத்த முனைந்தனர்.

கோட்டைக்கு மேலிருந்து தாக்கும் போர்வீரர்களைச் சமாளிக்க சிறிய படையொன்று போரிலீடுபட்டிருக்க மற்றப்படை வீரர்கள் அகழியை மூடிப்பாலம் அமைக்க முற்பட்டனர். மரங்களையும் முதல்நாள் போரில் இறந்துகிடந்த வீரர்களின் உடல்களையும் எடுத்துவந்து அகழிப்பாதையை நிரப்பும் பணியிலீடுபட்டவர்கள் யானைகளின் உதவியுடன் கோட்டை வாயிலின் கதவைத் தகர்ப்பதற்கு முயன்றுகொண்டிருந்தனர்.

நூலேணி எறிந்து கோட்டை மதில்மீது ஏறத்துடித்துக் கொண்டிருந்தனர் தாதுசேனனின் வீரர்கள். வீரர்களுக்கு உற்சாகமூட்டும் பொருட்டுக் குதிரையில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தான் தாதுசேனன். அவனுக்கு உதவியாக கீர்த்தி என்ற வாலிபன் மிகச் சுறுசுறுப்பாகக் காணப்பட்டான். கோட்டை மதில் மீதிருந்து வரும் கொடிய கணைகளின் இலக்குக்குத் தப்பி அங்குமிங்குமாகப் பாய்ந்து கொண்டிருந்தது அவன் புரவி. அதே வேளையில் கோட்டை அகழியில் விழுந்துபடும் வீரர்களின் பிணங்களைச்

## டெலிபோனில் சிறை

காசு போட்டுப் பேசக்கூடிய தானே இயங்கும் பொது டெலிபோன்கள் 1889ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கு முன்னால் டெலிபோன் கம்பனியிலிருந்து ஒவ்வொரு பொது டெலிபோன் கூண்டுக்கும் ஒரு குமாஸ்தா காவலிருப்பார். டெலிபோனில் பேசுகிறவர்கள் அவரிடம் உரிய கட்டணத்தைக் கொடுத்துவிட வேண்டும்.

ஒரு பயங்கரமான முறையை ஒருவர் கண்டுபிடித்தார். நல்லவேளை, அது பிரபலமாகவில்லை. டெலிபோன் கூண்டுக்குள் நுழைந்ததும், கூண்டுக் கதவு தானே பூட்டிக்கொள்ளும். உள்ளே இருப்பவர் வெளியேற வேண்டுமானால் குறிப்பிட்ட காசை அங்கிருக்கும் துளையில் போட்டால்தான் சாத்திக்கொண்ட கதவு திறக்கும். காசுபோடாதவரை சிறைவாசந்தான்.

— ஏ. எச். சித்திக் காரியப்பர் —

சுவைப்பதற்கு அகழிக்குள் வாய்களைப் பிளந்தபடியே காவலிருந்தன முதலைகள். போர்க்களத்தின் பயங்கரம் இராசரட்டையையே திடுக்கிடச் செய்து கொண்டிருந்தது.


அகழிப்பாதை பலமுள்ளதாகச் செப்பனிடப்பட்டுவிட்டதாகக் கீர்த்தி கூறவே "நல்லது! யானைகளை விட்டுப் பாலத்தையும், கதவுகளையும் சேர்த்து மோதச் செய்யுங்கள்" என்று குஞ்சர மல்லர்களுக்கு கட்டளையிட்டான தாதுசேனா.

அடுதத கணம் கோட்டைக் கதவுகளில் யானைகளின் மோதல். அதன் எதிரொலி இராஜரட்டையையே அதிரச் செய்தது. வீரர்களின் ஆரவாரம் செவியைத துளைத்து செவிடாக்கும் பேரொலியாக ஒலமிட்டது.

கோட்டைக் கதவுகளின் இரும்புத் துண்டங்கள் தந்தத்துடன் உராய்ந்து செந்தீச்சுடர்கள் பறக்க மூர்க்காவேசமாக மோதின குஞ்சரங்கள். ஒருநாழிகைப் பொழுது தாக்குதலின் பின்பு கோட்டைக் கதவுகள் பேரொலியுடன் உள்ளே சாய்ந்தன. அதைத்தொடர்ந்து உலகமே அதிரும்படியாக யானைகளோடு யானைகள் மோதின.

வாயிலே நுரைதள்ள பாய்ந்து வந்தன புரவிகள். வாளோடு வாள் மோதும் ஒலிகள்! கேடயங்களின் ஓசைகள்! ஆவேசக் கூக்குரல்கள்! மரண ஓலங்கள்!

காற்றெனப் பாயும் கரும்புரவியின் மீது அமர்ந்து அன்று கோட்டையையே கலக்கிக் கொண்டிருந்தான் கீர்த்தி. அவனுடைய புரவி திரும்பும் திசையெல்லாம் மரண ஓலங்கள்.



தாதுசேனாவை சுற்றிவர நான்கு ஐந்துபேர் நின்று தாக்கிக்கொண்டிருந்தனர். ஒரே ஒரு விநாடி தாமதித்திருந்தால் தாதுசேனா பிணமாகியிருப்பான். அதற்கிடையில் மின்னலெனப் பாய்ந்துவந்த கீர்த்தியின் புரவி அவனைக் காத்துக் கொண்டது. தாதுசேனாவை சுற்றிநின்ற வீரர்களின் தலைகள் நிலத்தில் உருண்டு கிடந்தன. நன்றி பொங்க கீர்த்தியைப் பார்த்தான் தாதுசேனா. அதற்கிடையில் மன்னர் தப்பிவிட்ட செய்தி காட்டுத் தீ போல களத்தில் பரவிவிட்டது. அதைத் தொடர்ந்து எதிரியின் வீரர்கள் தாதுசேனாவிடம் சரணடைந்தனர்.

வானைப்பிளக்கும் வாழ்த்தொலிகள். ஜெயகோசத்தின் மத்தியில் வீரர்களுக்கு நடுவே வெற்றிப் புன்னகையுடன் வீற்றிருந்தான் தாதுசேனா. அவனுடைய கனவு நனவாகி விட்ட பெருமிதம். கலகக்காரப் பாண்டியர்களிடமிருந்து அரசுரிமையைப் பறித்துக்கொண்டான் தாதுசேனா.

"கீர்த்தி, நமது வெற்றிச் செய்தி நாலாதிக்கிலும் பரவட்டும். படைகளை நிரைப்படுத்தி தகுந்த காவல் செய். நாளைமறுநாள் முடி சூட்டுவதற்கான நன்னாள். இராஜரட்டை விழாக்கோலம் பூணட்டும். இன்றுடன் இராஜரட்டையை பீடித்திருந்த போர்க்காய்ச்சல் விலகிவிட்டதாக முரசறையச் சொல்'' என்று கூறிவிட்டு அரண்மனைக்குள் சென்றான்.

அவனைப் பலரும் வரவேற்றனர். அரண்மனைப் பணியாளர்கள் முதற்கொண்டு தாதுசேனாவை வரவேற்ற காட்சி அவன் வாழ்க்கையில் ஓர் புதிய சகாப்தத்தையே உருவாக்கி விட்டதென்றே கூறவேண்டும்.

கன்னிப் பெண்ணின் தங்க நிற மேனியில் விம்மிப் புடைத்தோடும் பச்சை நரம்புபோல வெண்மணல் விரிப்பிற்கிடையே அந்தச்சிற்றாறு சலசலத்துஓடிக் கொண்டிருந்தது. பூவுலகின் நீர்நிலை ஒன்றில் தன்னந்தனியே இறங்கி வந்து களியாட்டமிட்டுக் கொண்டிருந்த வனதேவதை போல விளங்கினாள் நந்தா. அவளுடைய காவியக் கண்கள் சலசலத்தோடும் சிற்றாற்றையும், அடர்த்தியாய் அழகாய் விளங்கும் பூக்கள் நிறைந்த மரங்களையும், எழில் சிந்து மனோரம்மியமான அந்த இடத்தையும் பார்த்துக்கொண்டிருந்தன. தனிமையும், எளிமையும், வெள்ளிப்பாலம் போல ஓடும் சிற்றாற்று நீரும் அவள் மனதை உவகை வெள்ளத்தில் ஆழ்த்தவே அந்தச் சீதளப் புனலில் குதித்துக் குளிக்கவேண்டும் போலிருந்தது.

ஆற்றுநீர் விளிம்பை ஒட்டினாற் போல எழுந்து நின்ற ஒரு வழுக்கைப் பாறைமேல் ஒருக்களித்துச் சாய்ந்து உட்கார்ந்திருந்த நந்தா எழுந்து நின்

---

# கடவுள் நினைவு

தொகுப்பு: நிந்தவூர் ஷபாத்அஹமட்

ஒரு சமயம் மகாத்மாகாந்தியடிகளுக்கு ஒருவர் கடிதம் எழுதினார். நீங்கள் இவ்வுலகில் இன்னும் சிறிது காலமே இருப்பீர்கள். உங்களுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டதாக தான் கனவுகண்டேன், அதனால் எல்லா வேலைகளையும் ஏறக்கட்டிவிட்டுக் கடவுளைத் துதிப்பதில் உங்கள் கடைசி நாளைக்கழித்தால் பரத்துக்கு நல்லது'

இதைப் பார்த்துவிட்டு காந்தியடிகள் உடனே அவருக்குப் பதில் எழுதினார். அந்தப் பதிலில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. 'நீங்கள் நல்லதே எழுதினீர்கள் ஆனால் நாம் நமது கடைசி நாட்களை மட்டும் கடவுளைத் துதிப்பதில் கழிப்பது என்று சொல்வது தவறு வாழ்க்கை முழுவதும் கவலையற்றுக் கழித்துவிட்டுக் கடைசி நாட்களை மட்டும் கடவுளுக்குத் தருவது என்ற எண்ணமே பிசகானது. உண்மையில் நமது வாழ்வின் ஒவ்வொரு கணமுமே நமது கடைசி மூச்சாகவும் முடியக்கூடும். எனவே, எப்பொழுதும் கடவுள் நினைவோடு கருத்தோடு இருப்பதுதான் இகத்துக்கும் லாபம். பரத்துக்கும் லாபம்''

றாள். பூமணம் கலந்த இன்பச் சீதளத் தென்றல் அவள் மேனியை தழுவ ஆசைகொண்டது போல அவளது மேலாடையை இழுத்து அவிழ்க்க முயற்சித்தது. அவளும் கவலைப்படவில்லை. தன் கவலைகளையெல்லாம் மறந்து இயற்கையின் அமைதியுடன் ஒன்றிவிட்டாள்.

நேற்று முன்தினம் மதம் பிடித்த யானையைக் கண்டபோது ஏற்பட்ட நிலைக்கும் இப்போதைய அவளது தோற்றமும் துள்ளலும், உண்மைதானா என்று அவளுக்கே ஆச்சரியமாகவிருந்தது. அவள் தன் இருகரங்களாலும் நெஞ்சைப் போர்த்திக்கொண்டு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். அவளது இளந்தெங்கு நெஞ்சகங்கள் விம்மித் தணிந்தன. கவலைகளை மறந்தவளாய் சிறிது நேரம் அந்த நீர்ப் பரப்பில் விளையாட விரும்பினாள். மேலாடைகளைக் கழற்றி அந்த வழுக்குப்பாறையில் வைத்துவிட்டு சலசலத்தோடும் அருவியில் குதித்தாள். மீன் குஞ்சுபோல நீரில் நீச்சலடித்து விளையாடினாள்.

மரகத வர்ண மரங்களிலிருந்து மஞ்சளும், சிவப்புமான பூக்களும், ஊதா நிறத்தில் சில தளிர் இலைகளும் அருவி நீரில் சொரிந்து மிதந்துவந்தன. அவற்றை கைகளால் அளைந்துமகிழ்ந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் நிறைந்து துள்ளினாள் நந்தா. அவளுடைய மகிழ்ச்சிக்குக் காரணமும் இருந்தது. தந்தை தாதுசேன இராசரட்டையை வெற்றி கொண்டதும், மன்னனாக முடி சூடவிருப்பதும் அவள் ஏற்கெனவே அறிந்ததினால் ஏற்பட்டதுதான் அந்த மகிழ்ச்சி என்றாலும், அன்று மாலையே இராஜரட்டைக்கும் அவர்கள் புறப்படவிருந்தார்கள் என்பதே அந்தஎல்லையில்லா பேருவகைக்குக் காரணம். எவ்வளவு நேரம்தான் அந்தச் சிற்றாற்று நீரின் தழுவலில் அவள் பொன்னுடல் கிடந்ததோ தெரியாது. திடீரென ஏதோ மிருகத்தின் கனைப்புச் சத்தம் கேட்டு திடுக்கிட்டாள். உடனே நீரை விட்டெழுந்து வழுக்குப் பாறையை நோக்கி ஓடினாள். அங்கே ஆஜானுபாகுவான ஓர் வீரவாலிபன் அவளையே விழுங்கி விடுவதுபோலப் பார்த்துக் கொண்டு புரவிமீதமர்ந்திருந்தான்.

நீராடிவிட்டு வந்ததினால் உடலோடு ஒட்டிய மேலாடைகள் அவள் அங்கங்களை மெழுகினால் உருக்கி வார்த்தவை போன்று தெள்ளென காட்டிக்கொண்டிருந்தன. தேவசிற்பியால் உருவாக்கப்பெற்ற பொற்சிலையொன்றைப் பார்ப்பதுபோல அவனும் மெய்மறந்து அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அதே வேளையில் ''நந்தா நந்தா'' என்று குரல் கேட்டதும் அவ்வாலிபன் மின்னலென மறைந்துவிட்டான்.

— வளரும் —


## ஒரே பக்கத்தில் எழுதும் பழக்கம்

மார்க் ட்வென் என்ற பிரபல நகைச்சுவை எழுத்தாளர், வாலிப காலத்தில் ஒரு பத்திரிகை அலுவலகத்தில் ஆசிரியராக இருந்தார். வறுமையும், கடனும் அவரைச் சூழ்ந்தன. கடன்காரர்களின் ''பில்''களையும் குப்பைக் கூடையில் போட்டுவிடுவார்.

ஒருநாள் ஒரு கடன் ''பில்'' காகிதத்தை ஒதுக்கித் தள்ளியபோது குமாஸ்தா ''சார், அதன் பின்பக்கத்தைப் படியுங்கள். பணத்தை அனுப்பாவிட்டால் வழக்குப் போடுவதாக அதில் எழுதியிருக்கிறது'' என்று எச்சரித்தார்.

''ஓ! அதை அவனுக்கே திருப்பி அனுப்பிவிடும். இருபக்கத்திலும் எழுதப்படும் விஷயங்கள் கவனிக்கப்பட மாட்டா என்ற நமது முத்திரையை அதிலே குத்திவிடும்'' என்றார்.

தகவல்: திலிப் நவாஸ்



மணவறைக்குப் பின் புறம் ஆசிரியையும் 'அன்ரி' திருமதி பாலசிங்கமும்

## (9)

காலை உணவை முடித்துக் கொண்டு கோலாலம்பூர் டவுனைப் பார்க்கக் கிளம்பி விட்டோம். காருக்காக காத்து நிற்காமல் பஸ்ஸில் கிளம்பி விடுகின்றோம். நாம் இருக்கும் இடத்துக்கு அருகாமையிலேயே பஸ் வந்து திரும்பும் இடம் உள்ளதால் எங்களுக்கு சுலபமாக இருந்தது. பஸ்ஸில் டவுனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம். பெரிய தோட்டங்களுடன் உள்ள பழைய கட்டிடங்களும் புதுக் கட்டிடங்களும் போட்டி போட்டு தெருவில் போவோர் வருவோரின் கவனத்தைத் தங்கள் பால் இழுக்கின்றன, தெருக்களெல்லாம் கண்ணுக்குக் குளிர்ச்சியுடன் மிகவும் துப்புரவாக விளங்குகின்றன. வீடுகள் தோட்டங்கள் கொழும்பில் உள்ள கறுவாக்காட்டு வீடுகள் போல் உள்ளன.

டவுனை அடைகின்றோம். பல மாடிகளைக் கொண்ட பிரமாண்டமான கட்டிடங்கள் எம்மை வரவேற்கின்றன. விசாலமான தெருக்களுடே புகுந்து செல்கின்றோம். இரு மருங்கும் பல பெரிய வேலை ஸ்தாபனங்கள், வியாபார ஸ்தாபனங்கள், பல் வித வியாபார ஸ்தலங்கள் எல்லாம்

# நினைவு அலைகள்

திருமதி சரோஜினி கைலாசபிள்ளை

கண்ணைப் பறிக்கும் வண்ணம் பலவித விற்பனைப் பொருட்களையும் அழகழகாகக் காட்சிக்கு வைத்து அமோக விற்பனை நடாத்துகின்றனர்.


நாமும் பல சேலைகளை அழகழகாக காட்சிக்கு வைத்திருக்கும் ஒரு கடைக்குள் நுழைகின்றோம். கண்ணைப் பறிக்கும் பல நீல வண்ண வண்ண நைலக்ஸ் சேலைகளுடன் இந்தியாவில் தயாரான மணிப்புரிகளும், காஞ்சிபுரங்களும் கண்ணைச் சிமிட்டின.

பெண்ணுக்குக் கூறைச் சேலை அதே கடையில்தான் பார்த்து வைத்திருக்கின்றேன் என்று திருமதி செல்லத்துரை கூறிச் சேலைகளை எடுப்பித்துக் காட்டினார். பலவிதங்களிலும் முன்னேறிய நாட்டில் வாழும் திருமதி செல்லத்துரை தேர்ந்தெடுத்த சாரி பழங்கால கொடி கொடி போட்ட கூறைச் சேலையே. அவளின் மனதை மாற்றி இக் காலத்திற்கேற்ப எடுப்பான கூறைச் சேலையை வாங்கிக் கொடுத்தோம். பல நைலக்ஸ் சேலைகளை வாங்க வேண்டும் போல இருந்தாலும் நாம் சேலைகள் எங்களுக்கு வாங்கிக் கொள்ளவில்லை. ஏனெனில் மலேசியாவிலும் பார்க்க சிங்கப்பூரில் எல்லாச் சேலைகளும் விலை குறைவாகும். மலேசியாவில் 20 டாலருக்கு வாங்கும் சேலையை சிங்கப்பூரில் 15 டாலருக்கு வாங்கலாம், (சிங்கப்பூர் ஒரு டாலருக்கு எங்கள் ஊரில் பீக்ஸ் கூடன் ரூபா 4-70 சதமாகும்) ஆதலால் சேலைக் கடைகளை விட்டு விட்டு வேறு கடைகளைப் பார்க்கின்றோம். பல சாராருக்கும் பலவித உடைகளைத் தயாரித்து விற்கும் ஸ்தாபனம் ஒன்றுக்குள் உள்ளிடுகின்றோம். குளோப் (Globe) எனக் கூறப்படும் மூன்று தட்டைக் கொண்ட ஸ்தாபனம். தரத்திலும் அழகிலும் சிறந்து விளங்கும் உடைகளை பெரியவர்களுக்கும் சிறார்களுக்கும் அள்ளித் தருகின்றது. ஞாயமான விலையில் மகன் மதனுவுக்கும் மகள் மதுவுக்கும் சில உடைகளை வாங்கிக் கொள்கின்றேன். கலியாண வேலை காரணமாக சீக்கிரமே வீட்டிற்குத் திரும்பி விடுகின்றோம்.

திரும்பவும் பஸ்ஸிற்காகக் காத்து நிற்கின்றோம். எமது ஊர் போலவே அங்கும் மத்தியான நேரம். சரியான சனக் கூட்டம் பஸ்ஸிற்காகக் காத்து நிற்கின்றது. பஸ் வந்ததும் எல்லோரும் முண்டி அடித்துக் கொண்டு ஏறுகின்றார்கள். சீற் கிடைத்தவர்கள் இருக்கின்றார்கள். மற்றவர்கள் நிற்கின்றோம். பிரயாணிகள் ஏறி முடியு முன்பே பஸ் ஸ்டாட்டாகின்றது. அதிக வேகத்துடன் செலுத்துகின்றனர். பஸ் பிரயாணம் எங்கள் ஊரைப் போலத்தான் இங்கும். சிங்கப்பூரில் பஸ் பிரயாணம் இலங்கை மலேசியாவிலும் பார்க்க வசதி கூட, பஸ்களும் கூட. பஸ் கூலியும் இங்குள்ளது போல்தான். இங்கு ரூபாய்க் கணக்கு அங்கு டாலர்க் கணக்கு. இங்கு 3 கட்டை போக 30 சதம் அங்கும் அப்படியே அதாவது 3 கட்டை போக 30 காசு (டாலர் காசு) இங்கு நாம் ரூபாய்க் கணக்கில் உழைக்கின்றோம். அங்கு அவர்கள் டாலர்க் கணக்கில் ஊதியம் பெறுகின்றனர். இங்கு ஒரு கடையில் வேலை செய்யும் சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்கும் ஊதியம் 150/- ரூபா 175/- ரூபா அங்கு கிடைப்பது 150 — 200 டாலராகும்.

வீட்டை அடைகின்றோம். கலியாண வேலைகள் நடக்கின்றன. வீட்டில் சோடனைகள் பிரமாதம். கிட்டத்தில் உள்ள சொந்தக்காரர்கள், சிநேகிதப் பெண்மணிகள் ஒன்று கூடி பலகார வகைகள் சுடுகின்றார்கள். வீட்டில் ஒரே கலகலப்பு. 3—4 நாட்கள் ஒரே கலியாண வேலை.

—தொடரும்—




பாலமுனை
ஆதம்

சாந்தி. அவளால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. தொடர்ந்து அழுவதைவிட, அவளால் வேறொன்றும் செய்ய முடியவில்லை ராமு...... ராமு' அவள் எந்நேரமும் அவன் பெயரை முணுமுணுத்துக் கொண்டே இருப்பாள். 'கடவுளே...! என்னை நீ சோதித்துவிட்டாய்! நானொன்று நினைக்க நீ ஒன்று செய்துவிட்டாய்! அப்படி உனக்கு நான் என்ன தான் செய்துவிட்டேன். என்மேல் உனக்கு கோபமிருந்தால் என்னை மரணிக்கச் செய்துவிடுவதுதானே!' பைத்தியக் காரிபோல் சாந்தி, அவளுடைய அறைக்குள் குந்திக்கொண்டு கதைத்தாள். இவள் கதைத்தது; இவளின் அம்மா மீனாட்சியின் காதில் பட்டுவிட்டது.

'டியேய்...! கடவுள் ஒன்றும் செய்யலடி...! நீதாண்டி இந்த அவமானத்தை விலைகொடுத்து வாங்கின நீ... படிச்சவளா... ஒண்ட புத்திக்கு செருப்பால அடிக்கணும்டி...! அடிக்கணும். என்ர கண்ணுல முழிக்காம போடி...! போடி...!! ஏண்டி இருக்காய்...! மானம், மரியாதை, குடும்பக் கௌரவம் எல்லாம் பறந்தபோது, ஏண்டி இன்னும் இந்த வூட்டுல இருக்காய்! ஒர்ர ஒரு புள்ளையெண்டு உனக்கு செல்லம் கொடுத்து வளத்தேனே...! இப்படி செய்வாயென்று கனவுகூட நான் காணல்லயடி...!' கண்களில் கனல் பொறி பறக்க கூறிவிட்டுச் சென்றாள் மீனாட்சி.

சாந்தி கண்களில் இருந்து கடலென பெருக்கெடுக்கும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, மீண்டும் மீண்டும் விக்கி விக்கி அழுதாள்.

'சாந்தி...!...சாந்தி...!' வீட்டு வேலைக்காரி தங்கம் அமைதியாக கூப்பிட்ட குரல் கேட்டு சாந்தி திரும்பினாள்.

'சாப்பாடு ஆறிஞ்சி போச்சி சாப்பிடம்மா...' வேலைக்காரி சாந்தியிடம் பணிவோடு சொன்னாள்.

'என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவள் நீதாண்டி! எனக்கு சாப்பாடும் வேணாம் ஒன்றும் வேணாம். இந்த வீட்ட விட்டுப்போடி!' வேலைக்காரி மீது சீறி விழுந்தாள் சாந்தி.

'சாந்தி...! உன்னை நானா இந்த நிலைக்கு ஆளாக்கியவள். என்னைப் போ போ... என்று சொல்லுறாய்... எப்படிச் சாந்தி நான் போவன். உங்கம்மா... ஒருவார்த்தை போ' என்று சொல்லிட்டாளென்றால் இன்றைக்கே நான் போய் விடுவன். உன்னை நான் அவனோடு கச் சொன்னேனா...? சொன்னவற்றை; நானும் பக்கத்து வீட்டுப் பார்வதிக்கிட்ட சொன்னன். என்னில ஒரு தப்புமில்லையம்மா!' வேலைக்காரி தங்கம் அமைதியாகவும் பணிவுடனும் கூறிவிட்டுச் சென்றாள்.

'தங்கத்திலேயும் ஒரு தப்புமில்லை. என்னில்தான் தப்பு,' தன்னைத்தானே ஒரு முறை நொந்து கொண்டாள் சாந்தி. சாந்தியின் சிந்தனை சென்ற காலத்தை நினைவூட்டியது.

★

அன்று அப்பாடசாலையில் ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவு வந்தாகி விட்டது. பரீட்சை எழுதியவர்களை பாடசாலை அதிபர் கூப்பிட்டார். அனைவரும் தயங்கித் தயங்கி அதிபரிடம் சென்றார்கள். பரீட்சை முடிவுகளைப் பார்த்த அதிபர்;

'சாந்தி மட்டும்தான் நான்கு 'டீ' யிலேயும் நான்கு 'சீ'யிலேயும் சித்தி படைந்திருக்கு. மற்றவர்கள் பூரண சித்திபெறவில்லை,' என்று கூறினார்.

பரீட்சை முடிவுகளைப் பார்த்த அனைவரும் அவரவர் வகுப்புக்குள் சென்றுவிட்டார்கள். சாந்தி மட்டும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தாள். மற்றையோர்கள் துன்பக் கடலில் நீந்தினர்.

வகுப்பாசிரியர் ராமு ஜீ. சீ. ஈ. வகுப்பறைக்குள் வந்தார். 'இன்றைக்கு சாந்திதான் எல்லாருக்கும் 'பார்ட்டி' நடத்த வேண்டும்.' ஆசிரியர் சாந்தியைப் பார்த்துக்கூறினர்.

'சரிசார் பார்ட்டியை நாளைக்கு எங்கட வீட்டில ஒழுங்குசெய்யிறன். நீங்க ளெல்லாம் வரணும் சார். சாந்தி சட்டெனக் கூறினள். வகுப்பு மாணவ மாணவிகளையும் 'பார்ட்டிக்கு' வரும் படி அழைத்தாள்.

மறுநாள்; சாந்தியின் வீட்டில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் அனைவரும் சாந்தி நடத்தும் விருந்தில் கலந்து கொண்டனர் விருந்து முடிந்தாகி விட்டது. அனைவரும் சாந்தியிடமும், சாந்தியின் அப்பாவிடமும் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இல்லம் சென்றனர்.

அன்றிலிருந்து பாடசாலை செல்வதையும் நிறுத்திக்கொண்டாள் சாந்தி.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை. சாந்தி மட்டும் தனிமையில் வீட்டில் நாவல் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள்.

சாந்தியின் வீட்டுவாசலில் வெள்ளைக்கார் ஒன்று நிறுத்தப்பட்டது. காரிலிருந்து அவள் வகுப்பாசிரியர் 'ராமு' இறங்கி வந்துகொண்டிருந்தார்.

''வாங்க சார்... வாங்க'' சாந்தி வரவேற்றாள். ''இருங்க காப்பி கொண்டு வாறன்'' சொல்லியவள் சமையலறைக்குள் சென்று காப்பியை ஏந்திய படி வந்தாள். காப்பியை சாந்தி ராமுவிடம் கொடுக்க, சாந்தியைப் பார்த்துக்கொண்டே காப்பியை வாங்கிப் பருகினன் ராமு.

''வீட்டில் ஒருவருமில்லையா? என்று கேட்டான்.

''அம்மாவும் அப்பாவும் எங்க அத்தை வீட்டுக்குப்போய் இருக்காங்க தங்கமும் இப்பதான் வீட்ட போறாள்'' சாந்தி பதில் சொன்னாள்.

---

மாணிக்கம் குறுக்கெழுத்துப் போட்டி இல. 7ல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் பற்றிய விபரங்களும்,, கர்ப்பக் கிருகம்' விமர்சனப் போட்டியில் பரிசு பெறும் கட்டுரையும், பரிசு பெற்றவர்களது பெயர் விபரமும் எமது அடுத்த 'மாணிக்க'த்தில் இடம்பெறும்.

"மாப்பிள்ளை பார்க்கப் போயிருக்காங்க ..... அப்படித்தானே?" ராமு கேட்க "இல்லை சார்... நீங்க..." சாந்தி இழுத்தாள்.

"சாந்தி என்னைத் தவறாகப் புரிஞ்சுக்காதீர். நான் உன்னைத் திருமணம் செய்யப் போறன் தெரியுமா?' ராமு மகிழ்ச்சியுடன் சொன்னான். "அம்மா அப்பா சம்மதப்பட்டாச் சரி" நாணத்தால் முகம் சிவக்க மௌனமாகக் கூறினாள் சாந்தி.

"அப்ப... என் மேலே விருப்பமில்லை என்று சொல்றாய் என்ன?"

"நான் விருப்பமில்லையென்று கூறினேனா?" சாந்தி கூறிமுடியவில்லை; சாந்தியைப் பிடித்திழுத்த ராமு சாந்தியின் கன்னத்தில் தன் முகத்தை வைத்து 'இச்'சென முத்தம் கொடுத்தான்.

சாந்தி தன் கன்னத்தைத் தொடுவதும் சிரிப்பதுமாகவே இருந்தாள். நாட்கள் ஒன்று குறைந்தாலும், சாந்தியும் ராமுவும் கடற்கரையில் கூடும் நாள் குறையவில்லை. இருவருடைய மனங்களும் ஒன்றுபட்டு காதல் கடலென பெருகின. "வாழ்ந்தால் ராமுவுடன்; அல்லது வாழ்க்கையே வேண்டாம்" எனச் சாந்தி சபதம் எடுத்துக் கொண்டாள்.

☆

"சாந்தி வருகிற மாதம் உனக்கும் உன் அத்தான் டாக்டர் ராஜாவுக்கும் கல்யாணம்". எதிர்பாராத விதமாக அம்மா மீனாட்சி கூறியதைக் கேட்ட சாந்திக்கு மலைவெடித்து தலையில் விழுந்ததுபோல் இருந்தது.

"அம்மா நான் ராஜாவைக் கட்டிக்கவே மாட்டேன். ஆசிரியர் ராமுவைத்தான் கட்டிக்கொள்வேன்" ராமுவின் காதல் வெள்ளத்தில் நீந்திக் களிக்கும் சாந்தி திடீரெனச் சொன்னாள்.

"என்னடி சொன்னாய்... அது நடக்கவே நடக்காது" என்றவளாக பேய் பிடித்தவள் மாதிரி சாந்திக்கு பளாரென அறைந்தாள் மீனாட்சி. அறையை வாங்கிக் கொண்ட சாந்தி தொப்பென கட்டிலில் போய் விழுந்தாள்.

---

## தப்பபிப்பிராயம்

ஒரு நவநாகரிகப் பெண் தன்னை மன்னிக்கும்படி ஒரு பாதிரியாரிடம் வந்து கேட்டாள். பாதிரியார் கேட்டார், "உன்னை மன்னிக்க நீ என்ன குற்றம் செய்தாய்?;'

"நான் தினமும் காலையில் எழுந்து அலங்கரித்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்து நானே அழகியென்று எனக்குள்ளாக பெருமை கொண்டு நான் தற்பெருமையடித்துக் கொண்டேன்" என்றாள் அவள்.

அதற்குப் பாதிரியார் சொன்னார், "நீ செய்தது குற்றம் அல்ல ஏனெனில் நீ கொண்டது தற்பெருமையல்ல, தப்பபிப்பிராயம்!"

— இக்பால் —

நேரம் மாலை நாலு மணி என்பதை சாந்தியின் கைக்கடிகாரம் காட்டியது. சட்டென எழுந்தவள் அலங்காரம் ஒன்றும் செய்யாமல் கடற்கரைக்குச் சென்றாள்.

"என்ன இன்றைக்குப் பிந்திப் போச்சி. என்ன உன்முகம் வாடி இருக்கிறது, என்ன நடந்தது?" ராமு சாந்தியின் கோலத்தைக் கண்டதும் விஷயம் அறியத்துடித்தான்.


சாந்தி வீட்டில் நடந்த விஷயத்தைச் சொன்னாள். "அப்படியா சங்கதி தாய் தகப்பன் சொற்படி டாக்டரைக் கட்டிக்கிறது தானே" ராமு கோபித்தவனாகச் சொன்னான்.

"அத்தான், வாழ்ந்தால் உங்களுடன் வாழ்வேன். அல்லாது போனால் ஒருவருக்கும் வாழ்க்கைப்படவே மாட்டேன். இது சத்தியம்" சாந்தி சொன்னவளாக, ராமுவின் தலையிலடித்துச் சத்தியம் செய்தாள். "அத்தான்! அப்படி என் தாய் தகப்பன், ராஜாவைக் கட்டும்படி கட்டாயப்படுத்தினால்; நான் மூன்று மாதம் உங்களால் கர்ப்பிணி என்று சொல்லிவிடுகிறேன். எப்படியும் உங்களுக்கு கட்டித்தருவாங்க. எப்படி எனது தந்திரம்" என்று கேட்டாள்.

"எல்லாம் நன்மையா முடிஞ்சாச் சரி. பெண் புத்தி பின் புத்தி என்று சொல்லுவாங்க. பின் புத்தியாகப் போகக்கூடாது" ராமு சொன்னான்.

☆

"அம்மா...! எப்படி அம்மா நான் ராஜாவைக் கட்டிக் கொள்வேன். உங்க சொற்படி ராஜாவைக் கட்டிக்கிட்டேன் என்றால்; நான் ராஜாவுக்கு துரோகியாகி விடுவேனே அம்மா!" சாந்தியின் அம்மா ராஜாவைத் திருமணம் செய் என கட்டாயப்படுத்தவும் சாந்தி அப்படிச் சொன்னாள்.



ஒருவர்: விலைவாசிக் கிராக்கி எதிலே போய் முடியுதோ, தெரியவில்லையே?
மற்றவர்: 'கி' என்ற எழுத்திலே தான் முடியுது!

கல்முனை உஸ்மானியா

---

"என்னடி நீ துரோகியா...? விளக்கமாகச் சொல்லடி...!" ஆத்திரமாகக் கேட்டாள் மீனாட்சி.

"அம்மா...! ஆத்திரப்படாதீங்கம்மா! நான் சொல்வதைக் கேட்டா என்னை இரு துண்டாய் வெட்டினாலும் வெட்டுவீங்க அம்மா. அம்மா! நான் ராமுவுக்கு மூன்று மாதம் கர்ப்பம் அம்மா! ராமுவுக்குத்தான் நான் உரிமையாகி விட்டனம்மா!" சாந்தி அழுதழுது கூற வீட்டு வேலைக்காரியும் அவ்விடம் வந்துவிட்டாள்.

"என்னடி சொன்னாய்! வேசை...! என்றவளாக சாந்தியின் தலையைப் பிடித்திழுத்து பேய் மாதிரி அடித்தாள் மீனாட்சி. மீனாட்சியிடம் இருந்து சாந்தியை விடுவித்தெடுத்தாள் வேலைக்காரி தங்கம். தன் தலையிலும் உடலிலும் அடித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினாள் மீனாட்சி. மீனாட்சி தன் கணவன் ராகவனிடம் விஷயத்தைச் சொன்னாள்,

"அப்படியா...! நமக்கு சாந்தி துரோகம் பண்ணிட்டாள். இந்த விஷயம் வெளியே தெரியக்கூடாது. ரகசியமான முறையில் ராமுவுக்கும் சாந்திக்கும் திருமணத்தைச் செஞ்சிடுவம். ஏனென்று நம் டாக்டர் மாப்பிளே நம்ம வீட்டுக்குப் பெண் பார்க்க விரைவில வருவாரு. வந்தால் சாந்தியின் நடயிலயும் தோற்றத்திலயும் கர்ப்பம் என அறிந்திடுவார். என்ன சரியா? ராகவன் அமைதியாக தன் மனைவியிடம் சொன்னார். அம்மாவுடன் அப்பா சொன்னதைக் கேட்ட சாந்தி, மனதுக்குள் உள்ளூர மகிழ்ந்து, நமது எண்ணம் நிறைவேறி விட்ட நினைப்பில் மீனாட்சி அடித்த அடியையும் மறந்தாள்.

அன்று இரவோடிரவாக ராமுவின் இல்லம் சென்று, திருமணம் பேசி திங்கட்கிழமை திருமணத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

இதற்கிடையில், வீட்டு வேலைக்காரி தங்கத்தினுல் "சாந்திக்கு கர்ப்பம்" என்று சொன்னது காட்டுத் தீ போல் ஊரெங்கும் பரவியது. இதையறிந்த ராமு தன்னுடைய மானமும் பறிபோகிறதே என்றெண்ணி வருந்தினுன்.

நாளை நடக்கும் திருமணத்திற்காகிய வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன, அதே வேளை தந்திச் சேவகன் ராகவனிடம் தந்தி ஒன்றை ஒப்படைத்தான்.

தந்தியைப் பார்த்த ராகவன் "மீனுட்சி...! மீனுட்சி...!" கூப்பிட்டபடியே திடீரென விழுந்தார்.

ஓடிவந்த மீனுட்சி, சாந்தி, தங்கம் ராகவனைத் தூக்கி சாய்மனையில் இருத்தினர். கையிலிருந்த தந்தியை சாந்தியிடம் கொடுத்த ராகவன் கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டார்.

"பஸ்ஸுடன் கார் மோதி ராமு அண்ணு காலமாகிவிட்டார். உடன் வரவும் கமலா". தந்தி ராமுவின் தங்கை கமலாவால் கொடுக்கப்பட்டிருந்தது. "ராமு..நான் என்ன செய்வேன். என்னை மன்னிச்சிடும்மா;" சொன்னவளாக 'ஓ'வென அழுதாள் சாந்தி.

ராகவன், ராமு ஆகியோரின் ஈமச்சடங்குகள் முடிவடைந்தன. நாட்களும் பல ஓடிமறைந்தன.

☆

"டியேய்! அல்லும் பகலும் அழுதழுது இருந்தாலும், இனி வாழ்க்கைப் படுவதுமில்லை. மனிதனுக ஊருல தலை நிமிர்ந்து நடக்கிறதும் இல்லடி. எழும்படி கழுதை. ஏன்தான் என் வயிற்றில் வந்து பிறந்தாயோ?" கன்னத்தில் அறைந்தாள். கன்னத்தில் அறை விழவும்தான் சுயநினைவுக்கு வந்தாள் சாந்தி.

"அம்மா உண்மையெது... பொய்யெது என்றறியாத இந்த ஊருலகத்திலே இனி ஏன் தான் இருக்கணும்" சாந்தி பெரிய ஒரு விம்மலுடன் சொன்னுள்.

"நீ தொலைஞ்சு போடி"! மீனுட்சி சொல்லிவிட்டு வீட்டு வேலையைக் கவனித்தாள்.

"எல்லாம் நன்மையா முடிஞ்சாச் சரி. பெண்புத்தி பின்புத்தி என்று சொல்லுவாங்க. பின் புத்தியாகப் போகக்கூடாது" அன்று ராமு கூறியது நினைவுக்கு வந்தது.

"ராமு உன்மேல் காதல் கொண்டு கடவுளை மறந்து உன்னை அடைய முயற்சித்தேன். கடவுள் நம்மை ஒன்று சேராமல் தடுத்து; 'விதி' ஒன்றுண்டு என நிரூபித்துவிட்டார். எனவே இவ்வுலகில் நான் வாழ விரும்பவில்லை. நீ போன உலகிற்கு நானும் வருகின்றேன். ராமு...! ராமு...!! பைத்தியக்காரிபோல் கத்திவிட்டு கிருமி நாசினி போத்தலைத் திறந்து மடக் மடக்கெனக் குடித்தாள் சாந்தி. ●

# வாழ்க்கை இனிக்கின்றதே!

செல்வராஜ்

புகை வளையங்களுக்கூடே யோகேஷின் எண்ண வளையங்களும் சுழன்றுக் கொண்டிருந்தன. வீட்டில் எங்கும் நிசப்தம் நிலவிக்கொண்டிருந்தது. அறையில் தனியாக அமர்ந்தவண்ணம் சிகரெட்டை ஊதித்தள்ளிக் கொண்டிருந்த யோகேஷுக்கு உலகத்தின் மீதும் மனிதர்கள் மீதும் ஒரு வித வெறுப்பு ஏற்பட்டிருந்தது.

மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. உடம்பில் குளிர்காற்று வீசுவதை உணர்ந்து எதிரிலிருந்த ஜன்னலை மூடிவிட்டு சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்தான். சிறிதுநேர ஆழ்ந்த யோசனைக்குப் பின் மேஜை மீதிருந்த சிகரெட் பெட்டியை திறந்து மற்றுமொரு சிகரெட்டை பற்றவைத்தான். அவனின் செய்கையினால் கீழே கிடந்த சிகரெட் துண்டுகள் 'நீ என்னையா அழிக்கின்றாய்? இல்லை! நீதான் என்னால் அழிகிறாய்' எனக்கூறுவது போல் சிதறிக்கிடந்தன.

அவன் மனைவி பிறந்தகம் போய் விட்டாள் என்று கவலை கொள்ள வில்லை. இப்பலத்த யோசனைக்குக் காரணம் யோகேஷின் மனைவி வீட்டிலிருந்து கடந்த இருதினங்களுக்கு முன் வந்த விவாகரத்து மனு.

போனாலும் போனள், கோபம் தணிந்ததும் வரவேண்டியது தானே! இப்படிப்பட்ட பிடிவாதக்காரியை ரோஷமுள்ள எந்த ஆண்மகனும் கூட்டிவரமாட்டான். இது அவன் விவாதம். படித்தவளென்பதற்காக கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பதை மறந்து விடுவதா?

நாளைக் காலையில் கோர்ட்டில் ஆஜராகவேண்டும். இரண்டு தினங்களாக வக்கீல் நோட்டிசை மறந்தவன் இப்பொழுது சிந்தனையில் ஆழ்ந்திருக்கக் காரணம், நாளை கோர்ட்டில் என்ன பேசுவது? எதை பேசுவது? என்பதே.

அவனின் வசீகர தோற்றத்திற்கு கண் சிமிட்டியவர்கள் எத்தனை பேர். அத்தனையும் பெண்களே! யோகேஷ் கிரிஜா திருமணம் காதலில் ஏற்பட்டு இப்போ மோதலில் நிற்பதைப்பார்த்தால் காலத்தின் கோலம் எனலாம்.

அந்த சரஸவல்லி மோகனா அவன் வீட்டுக்கு வருவதோ கிரிஜாவோடு பேசுவதோ அவனுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவளைக் கண்டபோதெல்லாம் நச்சுபாம்பைக் கண்டது போல் அவனுக்கு தோன்றிற்று. அவள் அந்தளவு வெறுப்புக்கொள்ள காரணம் இருக்கத்தான் செய்தது.

அவன் அழகில் மயங்கியவர்களில் மோகனாவையும் சேர்த்துக் கொள்ளலாம். ஒருநாள் இரவு அவள் தவறாக நடக்க எத்தனித்தது உண்மை. அதற்கு இரவின் சூழ்நிலை துணைபுரிய

முயலுகையில் தன் புத்தி சாதுர்யத்தால் தப்பித்துக்கொண்டதோடு திருமணத்தையும் கூறி அன்றிலிருந்து மோகனாவின் நட்பையே துண்டித்துவிட்டான்.

மோகனா எவ்வித கெட்ட எண்ணங்களோடும் பழகவில்லை. கிரிஜாவை சிநேகிதி என்ற முறையில் அன்பாகப் பழகினாள். தன் தவறுக்கு மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். ஆனால் யோகேஷ் வீணாக தன் மனதை அலட்டிக் கொண்டான், என்றே கூறலாம். எங்கே கடந்தகால சம்பவத்தை நினைவுபடுத்தி இருவரிடையேயும் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தி விடுவாளோ என கற்பனை செய்யலானான்.

அன்றொருநாள் கிரிஜாவும் மோகனாவும் உள் அறையிலிருந்து தம்மை மறந்து உலக விவகாரங்களில் மூழ்கியிருந்தனர். களைத்துப்போய் வந்த யோகேஷுக்கு இவர்களின் பேச்சும் சிரிப்பும் எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்த்தது போலிருந்தது. அவன் வந்ததும் வராததுமாக கிரிஜாவைக் கூப்பிடலானான். உள் அறையிலிருந்ததால் யோகேஷ் வந்ததைக்கூட கவனிக்காமல் இருந்தாள். யோகேஷுக்கு கோபம் பீரிட்டது. வாய்க்கு வந்தபடி ஏசலானான். கிரிஜா சற்றுப்பயந்தாளானாலும் விட்டுக் கொடுக்காமல் ''ஏன் இப்படி கத்துகிறீர்கள். எனக்கு வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை. அதனால் மோகனாவை கூட்டி வைத்து பேசிக் கொண்டிருக்கிறேன்'' என வீடு அதிரும்படி கத்தவும் வந்த ஆவேசத்தில் அவளைக் கண்டபடி அடிக்கலானான். இன்று நினைத்துப் பார்க்கும்போது அவனுக்கு வெட்கமாக இருந்தது. தன் அறியாமையினால் ஏதோ தவறு நடந்து விட்டது என எண்ணமிடலானான்.

இங்கு இருவருக்கும் போராட்டம் நடக்கும்போது பக்கத்து அறையிலிருந்த மோகனாவோ தன் மனதோடு போராட்டம் நடத்திக்கொண்டிருந்தாள். பேசாமல் வீட்டுக்கு நடையைக் கட்டிவிடுவதா? அல்லது உள்ளே சென்று பார்ப்பதா என்று ஆலோசித்தவாறு இருந்தவள் அடிவிழும் சத்தம் கேட்டு மனசஞ்சலத்தோடு உள்ளே எட்டிப்பார்க்கவும் யோகேஷ் ''உன்னை யார் கூப்பிட்டது. கெட் அவுட்!'' என்றான். குனிந்த தலையோடு அவ்வசை மொழியையும் காதில் போட்டபடி சென்றவள் பிறகு அந்த வீட்டையே மறந்துவிட்டாள். பிறகு மோகனா, கிரிஜா தாய் வீட்டிலிருப்பதை அறிந்துக் கொண்டாள்.



ஆசிரியர்; கபூர் நீர் ஏன் வல்கீரின் பேனையை எடுத்தாய்?

கபூர்: இது கூடவா தெரியாது சார். எழுதுவதற்காகத் தான் எடுத்தேன்.

ஆசிரியர்: .........?.........?.........?.

—கபூர்

கோபத்தோடு வெளியே சென்ற யோகேஷ் திரும்பி வந்து பார்த்த போது கிரிஜா வீட்டிலில்லை என அறிந்து கொண்டான்.


இப்போ அவள் சென்று ஒருமாதம் ஆகிவிட்டது. வீடு வெறிச்சோடி கிடக்கிறது. கடை சாப்பாடு யோகேஷுக்கு அலுத்துவிட்டது. அவன் மனம் அவளை வீட்டுக்கழைத்து வர இடங்கொடுக்கவில்லை. திரும்பி வருவாளென மனதை சமாதானம் செய்து கொண்டிருந்தவனுக்கு வக்கீல் அழைப்பு அதிர்ச்சியடைய செய்ததில் வியப்பில்லை.

எல்லாம் முடிந்த காரியம் என்றதனுல் இனிமேல் நடக்கப் போவதைப் பற்றி ஆலோசிக்கலானுன். நாளை கோர்ட்டில் என்ன கூறுவது?

அவனுல் ஒன்று மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். கிரிஜாவை பிரிந்து வாழ்வது முடியாத காரியம். என்ன இருந்தாலும் கிரிஜா கோர்ட் வரை இழுத்து அவமானப் படுத்துவது அவன் எதிர்பாராதது. அவள் விவாகரத்துக்கு உடன்பட்டிருப்பாள் என்பது அவனுக்குத் திண்ணமாகிவிட்டது.

அவனது சிந்தனையை கலைக்க முடியாமல் 'நானும் அவளை மோகனு முன் வைத்து அடித்தது குற்றமே! அன்னியர் முன்னிலையில் அவமானப் பட எவருமே விரும்புவதில்லை. கிரிஜா அப்படி வீடு அதிரும்படி கொஞ்சமும் மரியாதை இன்றி பேசியிருக்கக் கூடாது என்பதால் அவள் மீதும் குற்றம் என உணர்ந்தான். அவளைப் பிரிந்து வாழ்வது கஷ்டம். நண்பர்களாயினும் இல்லாளைப் போல் அன்பு செலுத்துவது கடினம். எனவே நாளைக் கோர்ட்டில் கூறும் பதில் அவளோடு வாழ்வது என்பதே!

அவனின் சிந்தனை வளையம் ரங்க ராட்டினம் போல் ஓரிடத்தில் சுழன்று நின்றது.



விமானத்திலிருந்து 'பாரசூட்'' மூலம் குதிக்கும் பயிற்சி நடந்து கொண்டு இருந்தது. ஒவ்வொரு ராணுவ வீரராக பாரசூட் மாட்டிக் கொண்டு விமானத்திலிருந்து குதித்துக்கொண்டு இருந்தார்கள்.

புதிதாக பயிற்சிக்கு வந்த ஒருவர் பாரசூட் மாட்டிக்கொள்ளாமலே குதிக்க முயற்சி செய்தார். அதைக்கண்ட அதிகாரி, ''ஏய் நில்! பாரசூட் மாட்டிக் கொள்ளவில்லையா? என்று கத்தினுர்.

பயிற்சிபெற வந்தவர் அலட்சியமாக ''அதனுல் என்ன? இது வெறும் பயிற்சி தானே!'' என்று கூறிய படியே விமானத்திலிருந்து குதித்தார்.

- எம். எல். எம். இக்பால் -



மனைவி: ''இதோ பாருங்கோ ... ... சீக்கிரம் புறப்பட்டால்தானே க்யூவில் நின்னு சினிமாவுக்கு டிக்கட் வாங்கலாம்?

கணவன்: ''மண்ணுங்கட்டி... நான் கூட்டுறவுக் கடை க்யூவில் நின்னு சீனியும், மாவும் வாங்கப் போறன்!''

வாங்கி வந்த சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு படுக்கையறையின் லைட்டை அணைத்தான். அவனுக்குத் தூக்கம் கண்களை தழுவலாயிற்று. அவன் மனம் மானசீகமாகச் சொல்லிக் கொண்டது "கிரிஜா! வாழ்க்கை விளக்கைப் போன்று அணைந்துவிடக் கூடாது. அது என்றும் பிரகாசிக்க வேண்டும். நாளை நீ கூறும் பதிலில் தான் நம் வாழ்வே அடங்கியுள்ளது". அவனை நித்திராதேவி அணைத்து ஆறுதல் கூறலானாள்.

☆ ☆ ☆

இன்னையோட உன்ன தலை முழுகிட்டேன். போடிபோ. இனி நீ எனக்கு பிள்ளையுமல்ல. நான் உனக்கு தாயுமல்ல. உன்ன பெத்தேனே அந்த பாவத்த இப்போ சொமக்குறேன் போய் தொலை" கிரிஜாவின் தாய் சுற்றாடலையும் மறந்து ஏதேதோ திட்டிக் கொண்டு செல்லலானாள். கிரிஜா ஒன்றுமே கூறாது மௌனியாக யோகேஷை பின் தொடரலானாள்.

யோகேஷ் எதிர்பாராதது நடந்து விட்டது. அவனால் தன்னையே நம்ப முடியாத நிலை, அவனோடு சேர்ந்து வாழ கிரிஜா சம்மதித்து விட்டாள். பிரமை தட்டிப்போய் கிரிஜாவோடு நடந்துகொண்டிருந்தான்.


டாக்ஸியைப் பிடித்து இருவரும் வீடு நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தனர். யோகேஷின் மனதில் கோர்ட் காட்சி மாறிமாறி தோன்றிக்கொண்டிருந்தது.

அவன் அடித்துத் துரத்தியதாக குற்றம் சாட்டப் பட்டிருப்பதை மறுத்து சிநேகிதியின் பேச்சு சுவாரஸ்யத்தில் தன்னைக் கவனிக்கத் தவறியதால் அடித்ததாக பதில் கூறினாள்.

நீதவானின் கேள்விக்கு அவன் அவளோடு வாழ்வதாக பதிலளித்தான்.

பிறகு கிரிஜாவின் முறை வந்தது. நீதவான் "அம்மா, நீ படித்த பெண். இப்படி சிறிய சண்டை சச்சரவை விவாகரத்து என்ற பெயரில் கோர்ட் வரையும் இழுத்து வருவது புத்திசாலித்தனமல்ல. குடும்பத்தில் ஏற்படும் தகராறுகளை பெற்றோர்களோ அல்லது பெரியவர்களோ தீர்த்து அவர்களை ஒன்று சேர்த்து வாழ வைப்பதுதான் மனிதத்தன்மை. இதையெல்லாம் பெரிது படுத்துவது விரும்பத்தக்க காரியமல்ல.

உன் கணவர் உன்னோடு வாழ சம்மதித்து விட்டார். உன் பதிலை ஆலோசித்துக் கூறுவது முறை" என்றார். சிறிது நேர இடைவெளியின் பின் கிரிஜா "சம்மதம்" என்று பதிலளித்த கணமே அவளின் பெற்றோர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கலாயிற்று.



காதலி: அத்தான்! என் லவ் லெட்டருக்கு ஏன் நீங்க பதில் எழுதவில்லை?

காதலன்; எழுதி, என்ர அப்புவுக்குக் கிட்டே கொடுத்திருக்கிறேன். பிழையிருந்தால் திருத்தும்படி.

# வறுமையை வென்றவள்

## மருதூர் அலிக்கான்

### சாய்ந்தமருது வடக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கம்

(மாசிமாத 'மாணிக்க'த்தில் வெளியான மருதூர் அலிக்கானின் 'வறுமையை வென்றவள்' சிறுகதைக்கு சித்திரை மாத இதழில் வெளியான விமர்சனம் குறித்து எமக்குக் கிடைத்த 'மறுப்புக்கடிதங்களில்' ஒன்று இங்கே பிரசுரமாகிறது- இதுபற்றிய மறுப்புக் கடிதங்களோ, அல்லது ஆதரவுக் கடிதங்களோ இனி பிரசுரிக்கப்படமாட்டாது— —ஆசிரியர்)


மதிப்புக்குரிய ஆசிரியருக்கு!

பிரச்சினை இதுதான் "வறுமையை வென்றவள்" என்றகதைக்கான விமர்சனக் கடிதத்தை வாசித்தபோது மருதூர் அலிக்கானின் மேல் அபாண்டமான பொய்க்குற்றச்சாட்டொன்று சுமத்தப்பட்டதையிட்டு வேதனைப்பட்டோம். மருதூர்' அலிக்கான் மாணிக்கத்தில் பல கதைகள் எழுதியிருப்பதாகவும் வறுமையை வென்றவள் என்றகதை அவருடையதல்ல என்றும் சொல்ல இவர்களுக்கு வெட்கமில்லையா? மருதூர் வாணனுக்கு அப்படிப்பட்ட ஒருகதை தேவையென்றால் அலிக்கானிடம் எழுதிக் கேட்டால் எழுதிக் கொடுப்பார். அதைவிடுத்து ஒருவரின் கதைமேல்சொந்தம் கொண்டாட 'இவர்களுக்கு உரிமையில்லை.

மருதூர் அலிக்கானின் "வறுமையை வென்றவள்" கதையைத் தவிர வேறு எந்தக்கதையும் மாணிக்கத்தில் பிரசுரமாகவில்லை, என்பதை மாணிக்கம் தொடர்ந்து வாசித்த எல்லோராலும் நிரூபிக்க முடியும். இப்படி உண்மை வெளியில் இருக்க "முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள்" புதைக்க எண்ணுகிற இந்த இரண்டு நபர்களுக்கு மாணிக்கத்தில் இடம் கொடுத்ததை இட்டு வேதனைப்படுகின்றோம். மருதூர் அலிக்கானை வேண்டுமென்றே களங்கப்படுத்த எழுதப்பட்ட விமர்சனக்கடிதம் என்பது தெட்டத் தெளிவு.

மருதூர் வாணன் அலிக்கானின் கதையை சொந்தம் கொண்டாட எண்ணி இவ்வேலையை செய்வித்திருக்கலாம். இப்படியான பல காரியங்களை மருதூர் வாணன் [illegible]ரில் சேட்டை விட்டுப் பிடிபட்டவர் என்பதை நிரூபிக்க எங்களிடம் ஆதாரம் உண்டு.

| ஏ. லத்தீப்பா | எம். ஐ. மஜீகா | எஸ்.யூ. சல்மா |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |



சக்கடத்தார் நாடகத்தில் ஒரு காட்சி

# நிகழ்ச்சி நிரல்

மாலை 6-30 விழா ஆரம்பம்

வரவேற்புரை- ஆசிரியர்: திருமதி சரோஜினி கைலா

தலைவர் உரை: டாக்டர் சோ. ஆனந்தராஜன்

6-45 கொத்தியின் காதல் வெளியீடு.
முதற்பிரதி பெறுபவர்: ஜனாப் எம். எ
தமிழ்ப்பேராசிரியர், வித்தியோதய ப
உரை; நூலாசிரியர் செங்கை ஆழியா

7-15 நாடகம். ''சக்கடத்தார்''

7-45 நடனம். செல்வி சுபாஷிணி வேலாயு

8-05 இடைவேளை

8-15 புல்லாங்குழல். செல்வன் சிவனடியான்

8-40 நடனம். செல்வி சுபாஷிணி வேலாயுத

8-55 மதனன் அறிமுகம்

நீலமாளிகை விமர்சனப் போட்டிக்கான தங்க மோதிர
ஆசிரியையின் மூத்த மகன் செல்வன் மதி
பெறுபவர்: இரட்டையர் ஆ. குணசிங்க

9-15 நாடகம். 'சக்கடத்தார்'

9-45 நன்றியுரை, மங்கள கீதம்

மு.கு. மாணிக்கக் கலண்டர் போட்டியில் ரூ. 10,000 பரிசுபெறும்
பெயர்களும், இந்தியா சென்றுவர இலவச விமான ரிக்கட்
யின் பெயரும் 6-00 மணியிலிருந்து பகிரங்கமாக தெரிவு


**RATNAYAKE GENERAL SALES AGENCY**

Authorised Wholesale Distributors for

**EASTERN PAPER MILLS CORPORATION**

**124, PAGODA ROAD,**

**KOTTE.**

*T'Phone: 2080 Nugegoda.*

**Phone**

## கழ்ச்சி நிரல்

ரம்பம்

r: திருமதி சரோஜினி கைலாசபிள்ளை B. Sc. (Cey.)

r. ஆனந்தராஜன்

ன் காதல் வெளியீடு.

தி பெறுபவர்: ஜனாப் எம். எம். உவைஸ் M.A.

பேராசிரியர், வித்தியோதய பல்கலைக் கழகம்.

நூலாசிரியர் செங்கை ஆழியான்.

''சக்கடத்தார்''

செல்வி சுபாஷிணி வேலாயுதன்.

ள

ழல். செல்வன் சிவனடியான் சிவபாலன்

செல்வி சுபாஷிணி வேலாயுதன்

அறிமுகம்

போட்டிக்கான தங்க மோதிரப்பரிசு வழங்குபவர்

மூத்த மகன் செல்வன் மதியழகன்.

ர்: இரட்டையர் ஆ. குணசிங்கம்

'சக்கடத்தார்'

ர, மங்கள கீதம்

பாட்டியில் ரூ. 10,000 பரிசுபெறும் 1000 அதிர்ஷ்டசாலிகளின் சென்றுவர இலவச விமான ரிக்கட்டு பெறும் அதிர்ஷ்டசாலி ணியிலிருந்து பகிரங்கமாக தெரிவு செய்தல் ஆரம்பமாகும்.



செல்வி சுபாஷிணியின் நடனத்தோற்றம்


# S. S. M. INDUSTRIES

Approved Wholesale Stationers for

*EASTERN PAPER MILLS CORPORATION*

178, CENTRAL ROAD,
COLOMBO-12.

Phone: 35671

For Quality Textiles

Visit

*Gold Star Textiles*

Dealers in Textiles

**95, 3RD CROSS STREET.**

**COLOMBO-11.**

யோகேஷுக்கு தூக்கி வாரிப் போட்டது. அவள் வீட்டுக்கு வந்தாள் அவன் என்ன ஏற்றுக்கொள்ளாமலா இருக்கப் போகிறான். சம்மதம் என்று கூற அவனை கோர்ட் வரை இழுக்கக் காரணம்? ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. இருந்தும் அவன் உள்மனம் வாழ வருவாள் என்று கூறிக் கொண்டிருந்ததை இப்போது நினைத்துக் கொண்டான்.

நீதிபதி கிரிஜாவின் பெற்றோரை கடுமையாக கண்டனம் செய்தார். ''வாழப்போகிறவர்களை பிரித்துவைப்பது முறையா? தன் மகள் புகுந்த வீட்டிலிருந்து மனத்தாங்கலோடு பிறந்தகம் வந்துவிட்டால் நல்லதைச் சொல்லி அனுப்பி வைப்பதுதான் சிறந்த முறை. நீங்கள் என்னடாவென்றால்......'', அவர் யோகேஷுக்கும் அறிவுரைகள் வழங்கியே வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

வீடு வந்தாயிற்று. யோகேஷ் டாக்ஸிக்குப் பணத்தை கொடுத்து விட்டு வீட்டினுள் நுழையுமுன்னே கிரிஜா வீட்டு முன்ஹாலில் நின்று கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்த யோகேஷ் நாற்காலி யொன்றில் அமர்ந்துக் கொண்டான். வீடு மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. இருவருமே சிலைபோல் மௌனம் சாதிக்கலாயினர். எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று? அல்லது யார் முதலில் பேசுவதென்று?

யோகேஷுக்கு வீடு வந்தபின்னே மனதிலுள்ள வெறுப்புணர்ச்சிகள் வெளிப்படலாயின. அவனாகவே பேசலானான். ''கிரிஜா! என்னை கோர்ட்டுக்கு இழுத்து அங்கு வைத்து அவமானப்படுத்த வேணும் என்று இந்த நாடகம் ஆடினாய்?

அவனது பேச்சு கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை என்பதை கிரிஜாவின்




நல்லவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் எல்லாம் நல்லவர்களாகவே இருப்பார்கள் என்று சொல்வதற்கு இல்லை. அவள் ஒரு சினிமா நடிகை பெரிய குடிகாரி. குடித்துவிட்டுக் கார் ஓட்டியதற்காகவும் தெருவில் விழுந்து புரண்டதற்காகவும் பல முறை தண்டனை அடைந்து இருக்கிறாள்.

இவள் யார் தெரியுமா?

இங்கிலாந்து நாட்டின் முன்னை நாள் பிரதமர் மறைந்த சர்ச்சில் என்பவரின் மகள். இவர் உலகப் புகழ் பெற்ற அரசியல்வாதி. சிறந்த பேச்சாளர். எழுத்தாளர்.

இவள் பெயர் ''சாரா'' இவளுக்கு மூன்று கணவன்மார். மூன்றாவது கணவர் பெயர் அட்லிபிரபு என்பது. முதல் இரு கணவர்களையும் விவாகரத்து செய்துவிட்டாள். மூன்றாவது கணவரும் திடீரென மாரடைப்பால் இறந்துவிட்டார்.

தகவல்; திருமதி விஜயா நடராஜா

முகம் காட்டியதை அவன் கவனிக்கத் தவறவில்லை. அவன் திரும்பவும் பேச்சைத் தொடங்குமுன் ''தயவு செய்து பொறுமையாய் இருந்து நடந்ததைக் கேளுங்கள்'' எங்கே அழுகை வந்து விடுமோ என்ற பயத்தில் அவள் குரல் கம்மிப்போய் இருந்தது. அழுகை வராமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அதுதான் நடத்திக் காட்டினாயே நாடகம். பிரமாதம். அதிலே அந்த மோகனாவுக்கும் பங்கோ!'' ஏளன சிரிப்போடு கேட்டான் யோகேஷ்.

''அவளுக்கும் பங்குண்டு. ஆனால் நம்மைப் பிரிப்பதற்கல்ல. ஒன்று சேர்க்க. கணவன் மனைவியிடம் பூசல்கள் இருந்தால் நிவர்த்தி செய்வது பெற்றோரின் கடமை என்று நீதவான் சொன்னாரே. ஆனால் எனது பெற்றோர் அதற்கு விதிவிலக்கு. அவர்கள். நான் பிரிந்து வாழ்வதையே வரவேற்றனர். காரணம் உங்களைத் திருமணம் செய்தது அவர்களுக்கு கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. எனக்கு வேறொரு இடத்தில் நிச்சயம் பண்ண பார்த்தனர். என் பிடிவாதம் நம் கல்யாணத்தை நடத்தி வைத்தது. நான் தாய் வீடு வந்ததும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நம்மை பிரிக்க திட்டம் போட்டிருந்தனர். இப்படியான பெற்றோருக்கு பிள்ளையாகப் பிறப்பதைவிட..'' அவளால் கண்ணீரை அடக்க முடியவில்லை. பொலபொலவெனக் கண்ணீர் வடிந்தது.

நாற்காலியை விட்டு எழுந்து அவளின் கரங்களை ஆதரவாகப் பற்றினான் யோகேஷ். சிறிது நேரம் சென்றபின் கிரிஜா கைகளை விடுவித்தபடி கண்களிலிருந்து வந்த கண்ணீரைத் துடைக்கலானாள். அந்தக் கண்ணீரால் தன் மனச்சுமைக் கொஞ்சம் குறைந்தது போல் தோன்றிற்று. மீண்டும் கூறத் தொடங்கினாள்.

''உங்களை பிரிந்தே ஆகவேண்டும் என்று ஏதேதோ கூறி என்னை சம்மதிக்க வைத்துவிட்டனர். என் வரட்டு கௌரவம் அதற்கு உடன்பட்டது. சாவி கொடுத்த பொம்மையானேன். ஆனால் என் உள்மனம் அச்சுறுத்திக் கொண்டே இருந்ததை என்னால் உணர முடிந்தது. அச்சந்தர்ப்பத்தில் தெய்வாதீனமாக மோகனா வந்து சேர்ந்தாள்.

''என்னால் ஒரு குடும்பம் பிரிந்து விட்டதே என்று இரவும் பகலும் கண்ணீர் விடுகிறேன். கிரிஜா! உங்கள் வீட்டிலிருந்து வக்கீல் நோட்டீஸ் போனதையும் நீ விவாகரத்துக்கு உடன்பட்டிருப்பதையும் கேள்விப்பட்டே ஓடோடி வந்தேன்.

கிரிஜா! ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களின் அறிவுத்திறனை அறிய பரீட்சை வைக்கின்றனர். அதுபோல் இது இறைவனால் நடாத்தப்படும் வாழ்க்கைப் பரீட்சை.

கிரிஜா! பிரிந்து வாழ்பவர்கள் என்ன சுகத்தைக் கண்டார்கள். ஆணவம் வேண்டாம். தயவுசெய்து யோகேஷோடு நீ வாழவேண்டும். உன் பிடிவாதத்தை தளர்த்தி விடு. இன்னும் சில நாட்களில் நான் சிங்கப்பூருக்கு பயணமாகிறேன்......'' ஏதோ சொல்ல வந்தவள் அதோடு நிறுத்திவிட்டு 'என்றுக்கூறிச் சென்றாள்' என மோகனா கூறியதை சொல்லிவிட்டு மீண்டும் தொடரலானாள்.

''பலவாறு யோசித்த எனக்கு பெற்றோர் முகத்தில் கரிபூச இதைப் பயன்படுத்தினேன். ஒன்று மட்டும் இப்போது உணர முடிகிறது, அன்று தாய் வீட்டில் இல்லாத குதூகலம் இன்று இந்த வீட்டில் நிறையபெற்று விட்டேன்'' மனநிறைவோடு கூறினாள்.

# புதிய சமுதாயம்

**குமரன்**

புதியவொரு சமுதாயம் உருவாக வேண்டும்
    புரட்சிகர எண்ணங்கள் மக்கள் நெஞ்சில்
நிதியாகப் பெருகட்டும் பழைமை போக்கில்
    நித்திலங்கள் தமையாளிச் சிப்பி நீக்கி
புதியமணி யாரத்தில் தொடுப்போம் காலப்
    புதுமையுடன் பழமைஉற வாடக் காண்போம்
எதிர்காலம் பழையனவெ லாம் கழித்து
    ஏறுநடை போடட்டும் புதுப் பாதையில்

சாதிகளை வேரோடு அறுப்போம் மாந்தர்
    சஞ்சலந்தான் வேரறுத்து ஒழிய வேண்டும்
நீதிநெறி வழுவாத மனிதர் வாழ்வில்
    நிறைவன்றி குறையொன்றும் புகக்கூடாது
வீதியிலே மாடங்கள் தோன்றினால் தான்
    வேயாத குடிசையெலாம் புதையும் ஆங்கு
பீதியிலே சாபவர்கள் எல்லாம் மாறிப்
    பெருவாழ்வு காண்பதற்கு வழியுண் டாகும்

நாட்டினிலே பஞ்சத்தை பசிக்கு ரலை
    நலிந்தோரின் அவலத்தை ஒன்றாய்ச் சுடு
காட்டினிலே தீயிட்டுக் கொளுத்தி விட்டுக்
    கல்வியுடன் பல்கலைகள் வளர்ப்போம் வாழும்
வீட்டினிலே ஞானத்தின் வாழ்வைக் கொண்டால்
    வீதி-யெலாம் விஞ்ஞானம் பெருகும் தீட்டும்
ஏட்டினிலே உண்மைகளைக் குறித்தே வைத்தால்
    எதிர்காலம் நம்பிக்கை மயமாய் ஆகும்,

உழைப்பாளர் தலைவனையே தேர்ந்தெடுத் து
    ஊருக்குத் தலைவனெனச் சொல்வோம் இங்கே
அழைப்புக்குச் செவி சாய்த்து வருவோர்க் கெல்லாம்
    அன்போடு விருந்தளிப்போம் இங்கி ருந்தே
பிழைப்போர்க்கு வாழுகின்ற உரிமை யோடு
    பேச்சுரிமை எழுத்துரிமை தருவோம் தீமை
இழைப்போரே இல்லாமற் செய்வோம் நாட்டில்
    "எல்லார்க்கும் எல்லா" மென் றேமுழங்குவோம்!



# ஒரு கிளிக்சல்

## தீதமிழைசக்திருது

செம்பியன் செல்வன்

**இறைவனே!**

உன் ஆலயத்தின் மணிக்கதவங்கள் 'கணீ'ரெனச் சப்தித்துக்
கொண்டு மலரின் இதழ்களென விரியத் திறக் கின்றன.
உன் திருக்கோல கருணை ஒளி மகரந்தமாய் மணம் பரப்ப,
அதில் ஆழ்ந்து போகும் இதயங்கள்...
உன் சந்நதியே, உன் புகழ்பாடும்
இசையரங்காகி விடுகின்றதே......
வலம்புரிச் சங்குகளின் வளமார்ந்த முழக்கங்களும்......
துளையிட்ட மூங்கில்களின் சுநாதன அலைகளும்......
தம்புராக்களின் சுருதிலயங்களும்......
நாதஸ்வரங்களின் நாதச் சுருள்களும்...
மத்தளத்தின் மதமதர்த்த அதிர்வுகளும்,...
உன் செவியை நிறைக்கின்றன...
உதட்டிலே குமின் சிரிப்பை மலர விடுகின்றாய்
ஆனால்,
என் குரலும், உன் திருக் கோயில் வாசல் நிறைத்து,
உன் செவியை மஞ்சமாக்கித் தவழ வேண்டும்
என்ற அவாவிலே,
என் மனம் மதுரகனின் இறகுகளின்
ரீங்காரமாய்த் துடிப்பது
உன் குழையணிந்த பூஞ்செவிகளில்
விழவில்லையா?...

**தேவா,**

ஆழ்கடலின் மௌனக் குகைகளில் கர்ப்பமாகி,
அழுக்கே,
உணவாக்கி, உடையாக்கி
மௌடீகத்தின் முதல் உயிராய்
காலம் கழித்த என்னுடலை
உப்பலையில்
தூய்மை செய்து
அலைத்தோணி மேலேற்றி


(தோணியா, குப்பைவாரா?...)
கடல் ஓரம்,
மணல் நடுவில்
எனை ஏற்றிவிட்டாயே?...
(தேவனே உன் கருணைதான் என்னே?...
உணர்வற்ற உயிர்க் கூட்டிற்கும்,
உள் நோ ஏற்படக் கூடாதன்றோ
மணற் படுக்கை அமைத்தாய்,
மலர் மஞ்சம் விரித்தாய்?... )



என் இனிய சோதரர்கள்,...
மூத்தவர்கள்,
வலம்புரிச் சங்குகள்
உன் முன்றலில்,
உன்னையே அபிநயத்து
சிங்காரமாய்
முழக்கமிடுகின்றனர்
உன் உள்ளத்தைத் தம்பால் ஈர்த்து
விடத் துடிக்கின்றனர்.


ஆனால்,
நானோ
கிளிஞ்சலாய்,
மணல்மீது கோலமிட்டு,
பயனற்றுக் கிடக்கின்றேனே?
உன் முன்றலிலே என் கீதம் ஒலிக்காதா?...
என் ஆவல் ஒலி
உன் காதுகளில் விழவே விழாவா?...

மகாப் பிரபுவே,
நான் கடைந்தேறுவது
உன்னை அடைவது
எங்ஙனம்?...




[illegible]ண் நீக்கி
உற்றார் நீக்கி
உயிர்க் கூட்டைச் சுமந்து
கரை மணலில்
கோடைப் பகலின்
உச்சி வெயிலினிலும்
எழும்
என் கீதம்...

ஒரு கிளிஞ்சலின் கீதம்
ஒரு கன்றின் கதறல்
உன் கரப் புல்லிற்காக
தவிக்கும், ஏங்கும்
என் இரங்கற்பா
உன் திருச் செவிகளில் விழவில்லையா?...
விழுந்தும் உன் இரசனையை ஈர்க்கவில்லையா?
கவனத்தின் கணப் பொறியை
கவரவில்லையா?...



இசை வள்ளலே!
நானறிவேன்
என் இசை, பாடல், தாளம், ராகம் எல்லாமே...
குறைகள் நிறைந்தவை, குற்றங்கள் பொருந்தியவை
ஆனால்.
என் செய்வேன்?
என்னிடமுள்ளதைத் தானே நான்
உனக்கு
நிவேதனம் செய்ய முடியும்?
என்னிடம் இல்லாததை எதிர் பார்க்கும் அளவிற்கு
நீ—
நானில்லையே...

தேவனே!
கரை சேர்ந்த படகோட்டி,
ஆழ்கடல் சேர்க்கத் தயங்குகின்றானே?...
வந்த வழி செல்ல முடியாது என்ற தத்துவமா?...
தத்துவமும் நீயும்... சித்து விளையாட்டிலீடுபடுகிறீர்கள்...



நானோ?...
வெண் நிறப் பரப்பின்
சுடுமணலில்,
ஈரப் புதரில்
பாலை வெளியில்
கலங்கித் தவிக்க வேண்டுமா?...
என் அழகு...
என் கீதம்...
உன் விழிக்கு,
செவிக்கு
இதமே கொடுக்கவில்லையா?...

உனக்கு வரியோடிய சங்கா வேண்டும்?...
தாரை, தப்பட்டைகளா வேண்டும்......
சப்திக்கும் நாத சாரங்களா வேண்டும்...

ஐயனே,

இதுவென்ன சோதனை

ஏழை,

வலியற்றேன்...

என்னிடம் இவையெலாம் ஏது?


'ஆ!... யாரோ மெல்ல நடந்து என்னருகே வந்தமருகிறார்கள். ஏனோ என் மேனி சிலிர்க்கிறது...

'என்ன இது?...... கோயிலுக்குத் தான் வருகிறீர்கள் என நினைத்தேன் இதில் தங்கி விட்டீர்களே?...

'ஆமாம்... என் கோயில் இதயத்தில்தான். மானசீகக் கற்பனையில் தான்... அப்படியே இறைவனின் பாத தூளிகையில் சிரசைச் சாய்த்து விடுவேன்... அப்புறம்... மோனம்தான்... ஞானம்தான்... பேரின்பந்தான்...

'என்ன சொல்கிறீர்கள்... புரியவில்லையே?...

'ஆமாம்... இங்கு 'தினந்தோறும் மாலை வேளையில் வந்தமர்ந்து விடுவேன்... கோயிலின் மங்களகரமான, புனித ஒலிகள் என் காதில் விழும்... நான் ஒவ்வொன்றாக கற்பனை செய்து கொள்வேன்... அப்போது என் ஆத்மார்த்த ஒன்றிப்புடன், இறையுடன் கலந்து அதன் அழகுடன் கலையழகுடன் கருணையுடன் இலயத்து விடுவேன்... காண்பதை விட, கற்பனையில் அறிவின் துணையுடன் அவன் அழகை, அற்புதத்தை ரசிப்பதற்கு அவனிலிருந்து எட்ட இருப்பதே அழகு... சூரிய ஒளியை எட்ட இருந்து பார்த்தால்... எத்தனை அழகு... வண்ணம்... மலர் விரிப்பு...



—குரலில் தெய்வம் இறங்குகிறது; கனிகிறது; சிரிக்கிறது; தேவனே!...

உன் திருவுள்ளக் கருத்தை எப்படியெப்படி எல்லாம் புலப்படுத்துகிறாய் அறியாத நாம்... புலம்பியும்... தவித்தும் ஏங்கியும்... உருகியும்... திருப்தியழிந்து... விரக்தியுற்று...

டாண்!... டாண்!... டாண்!...

—மணியோசை வெற்றியின் கீதமாய் மீண்டும் விழுகிறது.

கவனியுங்கள்

தவிர்க்க முடியாத ஒரு சில காரணங்களால் இந்த இதழில் 'ஈழத்து மணிகள்' வரிசையில் இடம் பெறும் கதை இடம் பெறவில்லை. வழமை போல அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

# விழித்துக்கொண்ட மிருகத்திற்கு விருந்திடப்பட்டபோது

'கல்ஹின்னை ருயீம்'

'சோ' வென அடை மழை பெய்து கொண்டிருந்தது. இடி, மின்னல்கள் தங்களுக்கே உரித்தான பயங்கர ஓசை ஒலிகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. இடிச் சத்தம் குடிசைகளையும், பெரும் வீடுகளையும் கிடுகிடுக்கச் செய்தது போலிருந்தது. இடி மின்னல்களின் தாக்குதலால் கவலை கொள்ளாத பறவைகள் கூட தங்களின் இருப்பிடங்களில் இறகுகளை விரித்து குஞ்சுகளையும், சில தனிமையிலும் அணைத்தபடி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தன.

என்றாலும் அந்தக் குடிசையில் முடங்கிக் கிடக்கும் அந்த ஜீவராசியின் மனம் எந்நேரமும் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

பெண்ணாய்ப் பிறந்து விட்ட போதிலும் ஒரு குடும்பத்தில் ஆண்பிள்ளையொருவன் ஏற்கவேண்டிய அனைத்துப் பொறுப்புக்களையும் மரகதம் தான் ஏற்றிருக்கிறாள். சூழ்நிலை அவளை அப்படி மாற்றிவிட்டிருந்தது.

கணவன் குடிகாரன். சம்பாத்தியமில்லை. வெறும் ஊர் சுற்றியான். குடும்பப் பொறுப்பில்லை. மனைவி, மக்களை ஒரு நாளைக்காவது மகிழ்ச்சியில் ஆழ்த்தவேண்டுமே என்று அவன் என்றைக்கேனும் சுய உணர்வு பெற்று நினைத்திருக்க மாட்டான். கடைத்தெரு அவனைத் தினமும் கரம் நீட்டி காடைத்தனத்துக்குக் கைகொடுத்தது. கடைத்தெருவில் ஊதாரித்தனமாய்த் திரியும் காடையர்கள் அவனது நண்பர்கள்.

உலகம் தன்னை எம்மதிப்பில் பார்க்கின்றது என்பதனை அறியாத கருப்பையன், தான் உலகத்தை வெறியுணர்வுடன் பார்க்கின்றதை அவன் உணராமலில்லை. உணர்ந்த பிறகும் ஏனோ இவ்விழிவான செயலைச் செய்கின்றான்?

கணவனின் துன்புறுத்தல் எவ்வளவு தானிருந்த போதிலும், சட்டப்படி சம்பிரதாயப்படி, அவன் தன் கணவன் என்ற பெருநோக்கில் மனைவி என்ற ஸ்தானத்திலிருந்து கொண்டு கருப்பையனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வருகிறாள் மரகதம்.

வெந்தணல் வெயிலில், மாடு படாப் பாடுபட்டுழைத்து உடல் மெலிந்து, நடை தளர்ந்து விட்டாள் மரகதம். அன்று கலையழகு பொருந்திய அவள் செவ்விதள் மேனி, இன்று வாடிய மலராய் நீரற்ற பயிராய்க் காட்சியளித்தது.

இருளைக் கிழித்துக் கொண்டு ஜுவாலிக்கும் மின்னல்களும் அகிலத்தையே அதிரவைக்கும் இடியும் மரகதத்தின் சிந்தனையைத் திசை திருப்

பிற்று. கடந்தகால நிகழ்ச்சிகள் அவ ளது மனக்கண் முன் திரைப்படமாக ஓடியது.

● ● ●

அன்றொரு நாள். ஆம்! அன்று தான் மரகதத்தின் குடும்ப வாழ்வின் முதற்கட்டம். கருப்பையனுக்கும், மர கதத்திற்கும் 'ஜாம் ஜா'மெனத் திரு மணம் நடந்தேறியது.

மரகதத்தின் வீட்டுக்கு அண்மை யில் தான் கருப்பையனின் வீடும் இருந் தது. அவனது நடை, உடை, குணம், இவைகளைப் பற்றி மரகதத்தின் பெற் றோர்கள் நன்கு அறிந்து வைத்திருந்த னர். 'சிறந்த பண்புள்ள இவனே மரக தத்திற்குப் பொருத்தமானவன்' என்ற முடிவிற்குவந்த மரகதத்தின் பெற்றோர் கள் திருமணத்தையும் நிறைவேற்றி விட்டார்கள்.

திருமணத்தன்று கருப்பையன், மர கதத்தின் பெற்றோர்களுக்குக் கூறிய ஆறுதல் வார்த்தைகள் இவைதான்:

''என்னை நம்பி உங்களின் மகளை என்னிடம் தந்துவிட்டீர்கள். இனி அவளைப் பாதுகாப்பது என் கடமை. அவளை எவ்விதக் குறைவுமின்றி வாழ வைப்பேன். இது உறுதி. நீங்கள் எதற் கும் கவலைப்பட வேண்டாம்''.

கருப்பையனின் உறுதி வார்த்தை கள் மரகதத்தின் பெற்றோர்களுக்கு ஓர ளவு நிம்மதியைக் கொடுத்தது. என் றாலும் மகளுக்கே சொத்துக்களையும் எழுதி வைத்தார்கள். எவ்வளவு தானி ருப்பினும் ஒரேயொரு பிள்ளையல்லவா?

'ஒரு மனிதன் தாம்பத்திய வாழ் வில் ஈடுபடும்போதுதான் அதன் இன் பத்தை அனுபவிக்கிறான். ஒரு தனி மனிதனால் அதைச் சுவைக்க முடி யாது' என்பதனை அவர்களிருவரும் அனுபவத்தில் கண்ட உண்மையாகி விட்டது.

கருப்பையனின் மனம் மாறுபடத் தொடங்கியது. வேறூர் சென்று வாழ வேண்டுமென்று நினைத்தான். நினைத் தபடியே இருவரும் வேரூர் சென்ற னர். கணவன் எங்கு அழைத்தாலும் செல்லவேண்டும் தானே! எனவே பெற்றோரின் தடையையும் மீறி மரக தமும் வந்துவிட்டாள்.

வீட்டிலிருந்து கொண்டு வந்த கொஞ்சப் பணத்தைக் கொண்டு அங்கே வசிப்பிடமொன்றை உருவகித் துக்கொண்டு, ஒரு சிறு சில்லறைக் கடையொன்றினையும் அமைத்து வியா பாரம் செய்தான். அவனுக்கு அவனது வியாபாரம் தகுந்த வருவாயையும் கொடுத்துக் கொண்டிருந்தது.

குடிசை வாயிலின் கதவு தட்டப் படும் ஓசை வேகமாகக் கேட்டது. கணவன் தான் வந்திருப்பார் என்று நினைத்துக்கொண்டு சதவைத் திறந் தாள் மரகதம். அவனிடமிருந்து கள் வாடை வீசியது. சலித்துக்கொண் டாள் மரகதம். உள்ளே வந்த கருப் பையனின் பின்னால் இன்னுமொரு வன். அவன் யார்? இந்த அர்த்த ராத்திரியில் அன்னியன் ஒருவனை வீட் டில் வைத்திருக்கலாமா?

இருவருக்கும் உணவைக் கொடுத் து, படுப்பதற்காக பாயையும் விரித்து விட்டுச் சாப்பிடாமலே பிள்ளைகளை யும் உறங்க வைத்துவிட்டு அவளும் உறங்கிவிட்டாள். மேலுக்கு அசதியா யிருந்த படியினால் தன்னை மறந்து இரண்டு செல்வங்களையும் அணைத்துக் கொண்டு தூங்கிவிட்டாள் மரகதம்.

குடிசையின் ஒரு பகுதியில் ஒரு குப்பி விளக்கொன்று மட்டும் காற்றின் தாக்குதலால் தள்ளாடிக்கொண்டிருந்தது. எந்த நேரத்தில் அணையுமோ?

குப்பிவிளக்கின் பக்கத்தில் ஓர் உருவம்...ஆ...அது யார்? அதுவும் இந்த நடுநிசியில்...? விளக்கு ஒளி அது வடிவேலு என்பதனைக் காட்டித் தந்தது.

அந்தக் குப்பிவிளக்கைக் கையிலெடுத்த வடிவேலு முன் பக்கமாக வந்து மறுபடியும் திரும்பிக் கருப்பையனைப் பார்க்கிறான். அவனோ தன்னிலை மறந்து உறங்கிக் கொண்டிருந்தான். மறுபடியும் முன்பக்கமாக வந்தவன் அந்த இடத்தில் விளக்கை வைத்துவிட்டு அமைதியாக ஒருவரையொருவர் அணைத்துப் படுத்துக் கிடக்கும், தாயையும், பிள்ளைகளையும் பார்க்கிறான்.

அவனது உள்ளத்தில் உணர்வுகளின் தாக்கம் நேரத்திற்கு நேரம் அலைகளாகக் கிளர்ந்தது. மனித நிலையற்ற அவனது உணர்வுகள், அந்த உத்தமியான மரகதத்தினிடம் சங்கமிக்க நினைத்து அவனது மிருகக்கைகளில் அவளை அப்படியே அணைத்துக் கொள்கிறான்.


● ● ●

இரவு தாக்குதல் மேற்கொண்ட காற்றும், மழையும் வெற்றிகொண்ட வீரர்களைப்போன்று ஓய்ந்து கிடந்தது. சூரியனின் ஒளிக்கதிர்கள் படுத்துக் கிடந்த கருப்பையனின் முகத்தில் பட்டுத் தெறித்தது. விடிந்துவிட்டதையுணர்ந்ததும் தன்னோடு படுத்துக் கிடந்த வடிவேலைக் காணாது திகைத்து நின்றவமையம் லட்சுமி, ராஜுவின் அழுகுரல் வேகமாக அவனது செவிகளில் எட்டியது.

உள்ளே ஓடினான் அங்கே...

“மரகதம்... மரகதம்... என்ன நடந்தது உனக்கு?” என்றபடி பரிதாபமாகத் தலைவிரிகோலமாகத் தரையில் மயங்கி விழுந்திருந்த தன் மனைவியிடம் கருணையுடன் நெருங்கினான் கருப்பையன். அவனது உள்ளத்தில் மனைவியின் நிலையைக் கண்டதும் கனிவு பிறந்தது. படபடத்தான். என்ன நடந்ததென்று பிள்ளைகளிடம் விசாரித்தான் கருப்பையன்.

ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு ஏதேதோ எண்ணங்களையெல்லாம் தடவினான். மரகதம் சற்றே கண்விழித்தவன் மீண்டும் சட்டென கண்களைப் பொத்திக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். கருப்பையன் துடித்தான். என்னவென்று விசாரித்தான். அவளது செம்பவள வாயால் செப்ப முயன்றாள். வார்த்தைகள் சிதறி விழுந்தன.

அவளது ஒவ்வொரு வார்த்தைகளும் கருப்பையனின் இதயத்தைத் தீப்பிளம்பால் சுட்டெரிப்பதைப் போன்றவொரு பிரமை.

''மரகதம் உன்னை... உன் வாழ்வை நான் சிதைத்து விட்ட பாவி. நான் மனிதனல்ல மிருகம். மரகதம் ஆனால்... ஒன்று மட்டும் நிச்சயம். உன்னைக் கெடுத்தானே அந்தப் பாவி அவனை இன்றைக்கே யமலோகத்துக்கு அனுப்பிவிட்டு நான் மரண தண்டனையை அனுபவித்தாலும் பரவாயில்லை...'' எனக் குழந்தைபோல அழுது விட்டு புலிபோல் கத்தியொன்றை இடையில் செருகிக்கொண்டு வெறிபிடித்த வேங்கையாக ஓர் உயிரைப் பழிவாங்க ஓடிக்கொண்டிருந்தான் கருப்பையன்.

கருப்பையா வீட்டில்...

''மரகதம், அவனை வழியனுப்பிவிட்டேன்'' எனக் கத்தியபடி வந்தபோது மரகதம் எவனை என்று கேட்குமுன் குடிசை முற்றத்தில் பொலிஸ் ஜீப்பொன்று வந்து நின்றது.

''ஜீப்பில் ஏறு'' பொலிஸ் கான்ஸ்டபிள் கருப்பையனின் முதுகுப் புறமாக இரண்டு உதைவிட்டார்.

''சார், ஐந்து நிமிடம் எனது மக்களுடன் கதைத்துவிட்டு வரேன் எனக் கருப்பையன் அனுமதியைப் பெற்றுக்கொண்டு ''மரகதம் நீ என்னை மன்னித்துவிடு. மரகதம் பிள்ளை குட்டிகளோட உன்னைத் தனிமையில் விட்டுச் செல்கிறேன். என்னை இறைவன் மன்னிப்பானா? மரகதம் நான் புதிய உலகத்துக்குப் பிரவேசிக்க சுயஉணர்வு பெற்றேன். ஆனால் அது உடன்பிரவேசமாகவில்லை. நான் என்று ஜெயிலிலிருந்து வருவேனோ அன்றைக்கு நான் புது மனிதனாகத்தான் உன் முன்னால் காட்சியளிப்பேன். கண்மணிகளே! போய்வருகிறேன். மரகதம் நேரமாகிவிட்டது. போகிறேன்'' எனக்கதறியழும் மனைவி மக்களைப் பார்த்துக் கூறிவிட்டு... விலங்கு பூட்டப்பட்ட கைகளுடன் விடைகொடுத்துவிட்டு... ஜீப்பில் ஏறி அமர்ந்துகொண்டான். ஜீப் ஜெயிலை நோக்கிப் பறந்தது. ●



பாகவதர்: ராமு சார்... இன்னிக்கு சபாவிலே நம்ம கச்சேரி உண்டு. தவறா வந்துடுங்கோ...!

மற்றவர்: அதுக்கென்ன 'இயர் போனோட' வந்துடறேன்.

பாகவதர்: .........!......?......

— பாபு —

# இரத்தம்

தேனீர் ஏன்
சிவப்பாக இருக்கிறது...
வேகாத வெயிலில்
கொழுந்துப் பறிப்பவர்களின்
செங்குருதி
நீராவியாக மாறி
தேயிலையில் புகுந்துக்கொண்டதோ?

— தில்லையடிச் செல்வன் —

# மக்களும் ? ! மாணிக்கமும்

எம். ஹசனி  
கல்முனை-4.

கே. திட்டமிட்ட குடும்பத்திற்கும் திட்டமிடப்படாத குடும்பத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. முதல் குடும்பத்திலுள்ளவர்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். பின் குடும்பத்திலுள்ளவர்கள் பிரச்சினைக்கு உதாரணங்களாக வாழ்கிறார்கள்.

வல்கிஸ்  
கல்முனை,

கே. அழகு ஆபத்தானது என்கிறார்களே, அப்படியானால் அழகிய பெண்கள் எல்லாமே ஆபத்தானவர்கள் தானா?

ப. "அழகு" தான் ஆபத்தானதே தவிர அழகுள்ள பெண்களல்ல ஆபத்தானவர்கள். ஆனால் பிறரின் தீயநோக்கத்துக்கு இலக்காகும் பெண்களின் அழகு அவர்களுக்கு ஆபத்தை வலியத் தேடித்தருகிறது. அழகால் ஆபத்து அழகுள்ளவர்களுக்கே அன்றி அழகை ரசிப்பவர்களுக்கு அல்ல.

கே. குடிசையில் வாழும் பெண் கோபுரத்தில் வாழ்பவனை விரும்புவது எதைப் போன்றது?

ப. 'முயற்சி திருவினையாக்கும்' என்ற வார்த்தைக்கு விளக்கம் தரும் பதிலைப்போன்றது.

எம். வி. போஸ்  
ராகலை.

கே. நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளின் அக்காவும் என்னை விரும்புகிறாள். நான் என்ன செய்வது?

ப. உங்கள் காதல் ரகசியமானதாக இருந்தால், உங்கள் காதலியின் சகோதரியை நேரில் சந்தித்து நீங்கள் வேறு ஒருவரைக் காதலிப்பதாக கூறுங்கள். இன்றேல் உங்கள் காதலை அவளிடம் கூறி அவளது ஆதரவையும் பெறுங்கள்.

வே. நேசதுரை  
கந்தளாய்.

கே. பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் மாங்கல்யத்துக்கு மூன்று முடிச்சுப்போடுவது ஏன்?

ப. வாழ்நாள் முழுதுமே அவிழ்க்க முடியாத உறுதியோடு போடப்பட்ட அந்த முடிச்சுகள் பெண்கள் தங்கள் குடும்ப ரகசியங்களையும், கல்யாணம் என்ற பந்தத்தின் பெருமையையும், அளவோடு இல்லறத்தை அழகாக நடத்த வேண்டும் என்பதற்காகவும் இருக்கலாம்.

செல்வி கே. என். ராகிலா  
மன்னார்.

கே. பெண் பொறுமையின் இருப்பிடம் என்றால் ஆண்?

ப. 'பெருமை'யின் இருப்பிடம்.

செய்த்தூன் பி. ரம்ழான்  
புசல்லாவை.

கே. இன்பமும் துன்பமும் வாழ்வின் சுழற்சக்கரங்கள். ஆனால் இதே வேளையில் பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்கிறார்களே இது ஏன்?

ப. வறுமையைக் கண்டு பயப்படுகிறவர்களை வறுமை மேலும் வாட்டுகிறது. துன்பத்தைக்கண்டு வேதனையடைபவர்களை துன்பம் தொடர்ந்து வாட்டுகிறது. எல்லாவற்றையும் துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்கொண்டால் கெட்ட குடியும் சீர் பெற்றுவிடும்.

# முதலிரவு

## 2

நிர்மலாவின் மார்பின் நடுவில் குண்டு பாய்ந்திருந்தது.

கொலை செய்யப்படுவதற்கு சற்று முன் அவள் திடீரென ஏதோ ஒன்றைக் கண்டு பயந்து அந்த அதிர்ச்சியால் பிரமை தட்டிப் போய்த் தடுமாறியிருக்கிறாள். குண்டு பாய்ந்த சில விநாடிகளில் அவளது உயிர் பிரிந்திருக்கிறது.

கொலை நடந்த சமயம் அவளுக்கு இடது புற நாற்காலியில் அமர்ந்திருந்தது பிரபல்யமான ஒரு வெளிநாட்டு வர்த்தகப் பிரமுகர். வலது புறமிருந்தது அவளது அண்ணன் குமார். பின்புற வரிசையிலிருந்தவர்கள் அனைவருமே சந்தேகப்பட க் கூடிய வகையில் உள்ள நபர்கள் அல்ல. அதுவும் அவளது நடு மார்பில் குண்டு பாய்ந்திருந்ததால் இடது பக்கம் இருந்தவரையோ பின்புற வரிசையிலிருந்த எவரையோ சந்தேகிக்க முடியவில்லை. அப்படியானால்...

யார் கொலை செய்திருப்பார்கள்? கொலை செய்ய வேண்டிய காரணம்?

குமார் வெகுவாகக் குழம்பிப் போயிருந்தான். உடன் பிறந்த ஒரேயொரு தங்கையை அநியாயமாக பறி கொடுத்து விட்ட துக்கம் ஒரு புறமும் தனது கண்ணெதிரேயே அந்த வேதனை தரும் நிகழ்ச்சி நடந்து விட்டதே என்ற அவமான உணர்ச்சியும் என்றுமே கலங்கியிராத அந்தவாலிபனைக்கலங்க அடித்திருந்தன. ஒன்று...

கொலை செய்யப்பட்டது அவனது தங்கை. அதுவும் துப்பறியும் துறையில் புகழ் பெற்ற தான் பக்கத்திலிருக்கும் போதே. இது அவனுக்கு விடுக்கப்பட்ட ஒரு பயங்கரமான சவால்!

ஹோட்டலைச் சுற்றிலும் போலீஸ் காவல் இரட்டிப்பாக்கப்பட்டு ஹோட்டலின் உள்ப் பக்கம் அங்குலம் அங்குலமாக சோதனைக்குள்ளாகிக் கொண்டிருந்தது.

ஆழமான சிந்தனையிலிருந்த குமார் ஏதோ ஒன்று புதிதாக நினைவுக்கு வந்து விட்டதைப் போன்ற பரபரப்புடன் எழுந்து நின்று நிர்மலா பிணமாகக் கிடக்கும் நிலையினை சற்று உற்று நோக்கினான்.

தாமரை இதழ் போன்ற அவளது அழகிய வதனம் கறுத்துப் போயிருந்தது. புது ஊற்றைப் போல் கொப்பளித்திருந்த இரத்தம் அவளது சேலையோடு உறைந்து அவளது மார்போடு ஒட்டிப் போய்க் கிடந்தது. இடது கரம் தரையை நோக்கித்துவண்டிருந்தது. வலது கரம் ஒருக்களித்துச் சரிந்திருந்த அவளது தலையின் பின்புறத்தே சிக்குண்டிருந்தது.

அவள் பிணமாய்க் கிடக்கும் நாற்காலியின் கீழும் எந்த விதமான சந்தேகப்படக் கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு சில நிமிடங்களுக்குள் நடந்து விட்ட அந்தப் பயங்கரம் வெகு நுணுக்கமாக செயலாற்றப் பெற்றிருந்தது.

ராஜேஷ்

கைகளிரண்டையும் பின் புறம் இணைத்துக் கட்டியவாறு முன்னும் பின்னும் சிந்தனையோடு உலவினான் குமார்.

விருந்து மண்டபத்தில் கூடியிருந்த ஏனைய வெளிநாட்டவர்கள் தனித்தனியாக கூட்டம் கூட்டமாகப் பிரிந்து நடந்து விட்ட பயங்கரத்தைப் பற்றித் திகிலோடு விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் தியாகு நாலைந்து கான்ஸ்டபிள்களோடு உள்ளே வந்து குமாருக்கு வணக்கம் கூறி நின்றார்.

'ஸாரி மிஸ்டர் குமார், நடந்து போன நிகழ்ச்சிக்காக நாங்க ரொம்ப வருந்துகிறோம். விஷயத்தைக் கேள்விப் பட்டதும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த நாங்க யாருமே நம்ப மறுத்து விட்டோம். பிறகு கமிஷனர் ராம்தாஸ் எங்களுக்குக் கூறிய பிறகு வெகுவாகப் பதறிப் போய் விட்டோம். வெரி ஸாரி மிஸ்டர் குமார், தற்போதைய சூழ்நிலையில் நீங்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. கவலைப்படாதீர்கள். கொலையாளியை வெகு சீக்கிரமே கண்டு பிடிப்பதற்கு எங்களது பூரண ஒத்துழைப்பு தங்களுக்கு எந்நேரமும் உண்டு' என்றார்.

குமாரின் கண்களிற் பனித்துளிகளாக கண்ணீர் முத்துக்கள் திரண்டிருந்தன. மௌனமாக துடைத்து விட்டுக் கொண்டான்.

ஹோட்டல் நிர்வாகி உட்பட அனைவருமே குமாருக்கு அநுதாபம் தெரிவித்தார்கள். நிர்மலாவின் நிலைக்காக பரிதாபப்பட்டார்கள்.

கைரேகை நிபுணர், ஏனைய துப்பறியும் உதவியாளர்கள் நிர்மலாவின் பிணத்தைச் சுற்றி சுறு சுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

குமாரின் மனதில் ஒரு கேள்வி பொறி தட்டியது போல் எழுந்தது.

தனது உதவியாளன் ஜெய்காந்த் ஏன் இன்னும் வந்து சேரவில்லை...?

நேற்று அவசர வேலையாக பம்பாய்




போய் இன்று காலையில்தான் அவன் திரும்பி வந்திருந்தான். விருந்திற்கு கட்டாயமாக வருவதாகக் கூறியவன் இன்னும் ஏன் வரவில்லை...? நிர்மலா கொலையுண்ட விஷயத்தை தெரிந்து கொண்ட பிறகும் டெலிபோனில் உடன் வருவதாகக் கூறியவன் இன்னும் வராதிருக்கக் காரணம்...?

குமாரின் மனதில் பிரச்சினைகள் கேள்விகளாகி அலை மோதின.

போலீஸ் கமிஷனர் ராம்தாஸ் விருந்து மண்டபத்துள் நுழைந்து குமாரை நோக்கி நடந்து வந்தார்.

அவர் குமாரின் மாமா. குமாரின் தாயாரது உடன் பிறந்த சகோதரன். (குமாரின் பெற்றோர்கள் இப்போது இல்லை)

அவரது கண்கள் பனித்திருந்தன. குடும்பமே போலீஸ் குடும்பமாய் இருக்கும் போது இப்படி ஒரு சம்பவம் நடந்து விட்டதே என்ற வேதனை அவரது முகத்தில் நிறைந்து அவரது கம்பீரமான தோற்றத்தைக் கலங்க வைத்திருந்தது. தலை குனிந்து நின்றிருந்த குமார் பக்கத்தில் காலடி ஓசை கேட்டு நிமிர்ந்தான். எதிரே அவனது மாமா - கமிஷனர் ராம்தாஸ் - நின்றிருந்தார்.

எதற்குமே கலங்காத உறுதியான உள்ளம் கொண்ட அந்த வாலியன் கண் கலங்கி தனது மாமாவின் - கமிஷனர் ராம்தாஸ்-மார்பில்முட்டி மோதிக் கொண்டு சிறு பிள்ளை போல் விம்மி அழுதான்.

ஆறுதலாக அவனது முதுகைத் தடவி விட்டபடி ராம்தாஸ் அவனைத் தேற்றினர். 'கவலைப்படாதே குமார் நிர்மலாவிற்கு ஆயுள் அவ்வளவு பலமில்லையப்பா. எங்களுக்குக் கொடுத்து வைத்தது-அவ்வளவுதான். இனி வேதனைப் பட்டு என்ன பிரயோசனம்...? கொலைகாரனை வெகு சீக்கிரமே கண்டு பிடித்து விடலாம்' பாசத்தை விட கடமை உணர்ச்சி அவரை முந்திக் கொண்டு வார்த்தைகளாய் சிதறிற்று. (மௌனமாய்த் தன் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டார் அவர்)

குமார் விம்மித் தணிந்தான். 'எனது ஆசையான ஒரே தங்கை போய் விட்ட பிறகு எனக்கு என்ன வாழ்வு மாமா வேண்டிக் கிடக்கிறது?' பாசம் குமுறலாக வெடித்தது.

விசாரணைகள் முடிந்திருந்தன. கொலையாளிக்குப் பாதகமான எதுவித அடையாளங்களும் கிடைக்கவில்லை.



நிர்மலாவின் சடலத்தை சகல மரியாதைகளுடனும் வீட்டிற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

கமிஷனர் ராம்தாஸ் ஹோட்டல் வெயிட்டர்களை விசாரணை செய்து கொண்டிருந்தார்.

மௌனமாக நடந்து வந்த குமார் ஹோட்டல் வரவேற்பறைக்கு அருகில் வந்து நின்றான். தலை குனிந்த வண்ணம் வேலையில் ஈடுபட்டிருந்த பத்மினி தலை

நிமிர்த்தி குமாரை நோக்கினுள். அவள் கண்கள் கலங்கின. 'வெரி சாரி குமார் நான் எல்லா விஷயத்தையும் கேள்விப் பட்டேன். உடனடியாக எனக்கு அங்கு வர முடியாதபடி வேலைகள். கொலை நடந்த இடத்துக்குள்ளே யாரையுமே அனுமதிக்காததினுலே எல்லோரும் விபரத்தைத் தெரிந்து கொள்வதற்காக இங்கே வந்து நிறைந்துட்டாங்க. இப்ப தான் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. வரலாமென்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களே வந்துட்டீங்க...' கண்களிலிருந்து திரண்ட கண்ணீர் முத்துக்கள் உருண்டு சிதறின. சற்று முன் தன்னேடு காலை வணக்கத்தைப் பகிர்ந்து கொண்ட அழகிய மடந்தைக்கு நேர்ந்து விட்ட கதி அவளைப் பெரிதும் பாதித்திருந்தது.

சற்றுத் தூரம் பின்னுல் நடந்த குமார் திரும்பி 'மிஸ் பத்மினி, எனது சகோதரியையே கொலை செய்து எனது திறமையைப் பரிசோதிக்க நினைக்கும் கொலையாளியை நான் கண்டு பிடிக்காமல் விடப் போவதில்லை. சட்டத்தை அவனுல் ஒரு காலமும் ஏமாற்ற முடியாது' என்று கூறியவன் மௌனமாக காரை நோக்கி நடந்தான். அவனைத் தொடர்ந்து ஹோட்டல் பாதுகாவலர் நடந்தார்கள்.

ஆம் புலன்ஸ், நிர்மலாவின் பிரேதத்தைத் தாங்கிக் கொண்டு ஹோட்டலை விட்டு வெளியே நகர்ந்தது. குமாரின் காரில் கமிஷனர் ராம்தாஸ் ஏறியிருந்தார். போலீஸ் வாகனம் பின் தொடர கார்கள் ஒவ்வொன்ருக வெளியே நகர்ந்தன. ஹோட்டல் முழுவதும் போலீஸ் பாதுகாப்புக்குள்ளாகி இருந்தது.

நிர்மலாவின் இறுதிச் சடங்குகள் சோக மயமாக நடந்து முடிந்தன. அந்த இறுதி யாத்திரையில் கலந்து கொள்ளக் கூட ஜெய்காந்த் வரவில்லை.

அதற்கான காரணம் குமார் மறு நாள் பின்னேரம் ஜெய்காந்த தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குப் போன பிறகுதான் புரிந்தது.

முதல் நாள் முழுதும் திறக்கப்படாமலே இருந்த ஜெயகாந்தின் அறையின் படுக்கையில் அவன் நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

—தொடரும்—




ஈட்டிய செம்பொருளை அகப்பேய்
இராவிலுந் தூங்காமல்
பூட்டிய பெட்டிக்கிட்ட அகப்பேய்
பூதம்போல் காத்திருப்பாய்.

வாடியே கெஞ்சினுலும் அகப்பேய்
வட்டியில் தள்ளாதே
மோடிக்காரர் காசை அகப்பேய்
மொட்டைதட்டிப் பறியே.

ஒரு உபதேசம் அகப்பேய்
உயிர் வெறுத்தேனும்
திரைகடலோடியும் நீ அகப்பேய்
திரவியந் தேடு.

தொகுப்பு- சுப்பிரமணியம்

## மாணிக்கம் மதனன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 7

# பரிசு ரூபா 100/-

## முடிவுத் திகதி 30-6-75

### இங்கு 'மாணிக்கம்' 'மதனன்' குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 படிவத்தைப் பிரசுரித்துள்ளோம்.

இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் இங்கு பிரசுரமாகியிருக்கும் குறுக்கெழுத்துப்போட்டி படிவத்திலேயே நிரப்பி அனுப்ப வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்படிவத்துடன் ரூ. 1/ பெறுமதியான தபால் தலைகளும் அனுப்ப வேண்டும். இப்போட்டியில் தபாற் தலைகள் அனுப்பிப் பங்கு பெறுவோருக்கு மாணிக்கம் 'மதனன்' பிரதி ஒன்று இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பிரசுரமாகியிருக்கும் குறுக்கெழுத்துப் போட்டிப் படிவமும் ரூபா 1/- பெறுமதியான தபாற்தலைகளும் இணைக்காமல் வரும் போட்டிப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் ரூ. 1/- பெறுமதியான தபாற் தலைகள் இணைக்கப்பட வேண்டும்.



பெயர்:..........................................................

விலாசம்..........................................................

..........................................................

தங்களுக்குத் தேவையான மாத இதழ்..........................................................

# பரிசு ரூபா 100/-

**முக்கிய குறிப்பு:**

நீங்கள் அனுப்பும் ரூ. 1/- பெறுமதியான தபாற் தலைகள் 'மாணிக்கம் மதனன் பிரதி ஒன்றுக்கும், அதை அனுப்பும் தபாற் செலவுக்குமேயல்லாமல் குறுக்கெழுத்துப்போட்டிக்கான பிரவேசப் பணமல்ல.

இப் போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கு எம்மிடம் எஞ்சியுள்ள பிரதிகளே அனுப்பி வைக்கப்படும். எது காரணம் கொண்டும் புதிய பிரதிகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது. புதிய பிரதிகளை எதிர் பார்த்து இப்போட்டியில் எவராவது பங்குபற்ற நினைப்பார்களேயானல் அவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற வேண்டாமென தயவு கூர்ந்து கேட்டுக் கொள்ளுகின்றோம். தாங்கள் விரும்பும் இதழின் மாதத்தை தங்கள் பெயர் விலாசத்தின் கீழ்உள்ள இடத்தில் குறிப்பிட்டு அனுப்பினல் எமக்கு மிக உதவியாயிருக்கும்.

இப்போட்டியில் ஒன்றுக்குமேல் சரியான விடைகள் எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் பரிசுத்தொகை முதல் பத்து அதிர்ஷ்டசாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இப்போட்டி பற்றிய சகல முடிவுகளும் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. போட்டிப்பிரவேசப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

'மாணிக்கம்' மதனன் குறுக்கெழுத்துப் போட்டி இல.- 7
மே/பா. மாணிக்கம்', 29, கல்யாணி வீதி, கொழும்பு-6.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 7 புதிர்

இடமிருந்து வலம் :

1. ஆறுமுகக் கடவுள்.
4. ஒரு சிறுவர் மாத சஞ்சிகை.
6. பெற்றவர்களுக்குப் பெண்பிள்ளை.
7. இலங்கையில் புரிய மறுக்கும் ஒன்றின் பெயர்.
9. எதையும் ரசிக்கும் தன்மை படைத்தவன்.
10. நிறுத்து.
11. நித்திரை.
12. ஒரு இராசியின் பெயர்.
14. நடனங்கள் ஆடும்போதும், பாடல்கள் பாடும்போதும் ''இது'' பிடித்து செய்ய வேண்டும்.
15. சூரியனின் ஒளிக்கற்றைகளுக்கு இப்படியும் ஒரு பெயர்.
18. மகாபாரதக் கொடைவள்ளல். ஒரு எழுத்துக் குறைகிறது.
19. உலகில் நடப்பவைகள் யாவும் அவன் திரு........
20. இந்தியாவிலுள்ள ஒரு ஊரின் பெயர்.
21. கவனம்.
22. கவலை. இங்கு மாறிக்கிடக்கிறது.

## மேலிருந்து கீழ்

1. சமாதானம்.
2. சொல்லக் கூடாதது.
3. திருடன். இங்கு மாறிக்கிடப்பதுடன் ஒரு எழுத்தில் ஒரு புள்ளி குறைகிறது.
4. புத்தி.
5. விவாதம்.
7. வார நாட்களில் ஒன்று.
8. பிச்சை......போது பாத்திரமறிந்துபோடல் வேண்டும்.
10. கற்க, கற்பவை கசடறக் கற்க, கற்றபின் நிற்க அதற்குத்......
13. நரகத்திற்கு எதிர்ச் சொல்.
14. கஷ்டம் உண்டாகும்போது தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் சமாதானம்.
15. ஒரு பெண்ணிற்குத் திருமணமானபின் அவளுக்குத் துணையாய் ஆகுபவன்.
16. பிறருக்காக எதையும்விட்டுக் கொடுத்தால் அதற்குப் பெயர்.
17. வனம்.
18. பெண்களின் அணிகலன்.

---

# ஆரோக்கியமான வாழ்விற்கு

சுண்டைக்காய் வற்றலையும். சுண்டைக் காய் கறியையும் அடிக்கடி சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் சுண்டைக்காய் வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்கிறது. மார்பில் சளி இருந்தால் அதைக் கரைத்து விடுகிறது. மருத்துவ சத்துக்கள் நிறைந்தது இந்தச் சுண்டைக்காய்.

முகத்தில் கரும் புள்ளிகள் இருந்தால் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை கொதிக்க வைத்து ஒரு துண்டினால் முக்காடு போட்டுக் கொதிக்கும் தண்ணீரிலிருந்து வரும் ஆவியை முகத்தில் படும்படி பிடியுங்கள். சில நாட்கள் இப்படிச் செய்து வந்தால் கரும் புள்ளிகள் மறைந்து விடும்.

முகத்தில் சிலருக்கு எண்ணெய் வழிந்து கொண்டேயிருக்கும். தலையிலிருந்து வடியும் எண்ணெயல்ல இது. தோலில் இருந்து தன்னால் வெளியாகி முகத்தின் அழகைக் கெடுக்கும் எண்ணெய் இது. இப்படி இருந்தால் காலையில் எழுந்ததும் வென்னீரில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து பருக வேண்டும். அல்லது பச்சைப் பயறு அல்லது, கடலைமாவைத் தேய்த்து முகத்தைக் கழுவ வேண்டும். இது இயற்கை வைத்தியம்.

குடலில் ஏற்படும் புளிப்பையும், வயிற்றில் ஏற்படும் வாய்வுத் தொந்தரவையும் குணமாக்குகின்றது மோர். மோர் சத்து நிறைந்தது. தயிரை விட விரைவில் ஜீரணமாகக் கூடியது. அடிக்கடி மோர் சாப்பிடுகிறவர்கள் அதிக நாட்களுக்கு உயிரோடு இருக்கிறார்கள்.

பச்சைப்பயறு, பச்சை அரிசி ஆகிய இரண்டையும் சேர்த்துக் கஞ்சியைப் போலச் செய்து, அதைக் காலை நேரத்தில் சாப்பிட்டு வந்தால் உடம்பு வலிவு பெறும். வனப்பு வரும். உடம்பிலுள்ள பித்தம் போகும்.

கொட்டாவி வந்தால் அதை அடக்கக் கூடாது. கொட்டாவியை நன்றாக வெளியே விட வேண்டும். கொட்டாவியை அடக்குபவர்களுக்கு அமைதியான தூக்கம் கிடையாது.

— திருமதி விஜயா நடராஜா —

"சின்னச் சின்னக் கண்ணனுக்கு என்ன வேண்டும்?"

**ஜோதி இன்டஸ்றீஸ்**

தயாரிப்பான இனிப்பு வகைகள்தான் வேண்டும்

**மணமுள்ள ★ குணமுள்ள ★ தரமுள்ள**


**சுவையுள்ள**

பல நிறங்களிலும் தினுசுகளிலும் உருவாகும்

# ஜோதி இன்டஸ்றீஸ்

தயாரிப்பான

## இனிப்பு வகைகளைக் கேட்டு வாங்கிப் பாவியுங்கள்!




ஏகவிநியோகஸ்தர்கள்:

வெ. செல்லத்துரை நாடார்

(உரிமையாளர்)

218, காஸ்வேக்ஸ் வீதி, கொழும்பு-11

தொலைபேசி:— 33152



# ஏங்கு நாட்டினம்

சங்கருக்கு உள்ளம் நெகிழ்ந்தது. ‘பரிதாபத்திற்குரியவன்’ எனப் பெருமூச்சு விட்டவன் ‘சேது உண்மையில் எப்படிப்பட்டவன்.? அவன் தங்கை கமலா?...’ என்று வினவினான்.

‘நல்லவர்கள் நானறிந்த வரையில்’

‘அப்படியானால் எப்படிக் கெட்டுப் போனார்கள்?’

‘காலத்துக்கு எதையுமே மாற்றும் சக்தியுண்டு சங்கர். நல்லவர்களைக் கெட்டவர்களாக்கும், பணக்காரர்களை பராரியாக்கும், நல்லவன் கூடத் திருடுகிறான். பொய் சொல்லுகிறான். காரணம் வறுமை. வறுமையினால் அருவருடையான கவலை. வாழ்வுக்கு வழி காட்டியான பெற்றோரை இழந்த வேளையில் கவலை அவர்களைக் கெடுத்திருக்கலாமல்லவா?’

‘இருக்கலாம். இருக்கலாம். தென்றலாக வந்தவள் புயலாக மாறி நிற்கிறாள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையடா’ என முனகினான் சங்கர்.

‘சரி, சரி, அந்தக் கடிதம் எங்கே? கொடு விஜி காத்திருப்பாள்’ என அவசரப்பட்டான்.

சங்கர் கடிதத்தைக் கொடுக்கவே பையில் வைத்துக் கொண்டு தன் காதலியைக் காணப் புறப்பட்டான்.

இடிந்து போய் அமர்ந்தான் சங்கர்.

● ● ●

‘விஜி அதோ பார்’

சுந்தர் சுட்டிக் காட்டிய இடத்தை நோக்கினாள் விஜி.

அவளுக்கு ஒன்றுமே தெரியவில்லை ‘என்ன காட்டுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே’ என்றாள் அவள்.

‘அதோ அங்கே பார் இளஞ்சிவப்பு மலர்கள் கொத்து கொத்தாகத் தொங்குகின்றனவே அங்கே பார்’ என்றான் மீண்டும் சுட்டிக்காட்டியபடி.

மாத்தளை

செல்வம்

விஜி நன்றாகப் பார்த்தாள். அங்கே அந்தப் பெயர் தெரியாத பூமரத்தில் இரண்டு வெண்புறுக்கள் ஒன்றை ஒன்று விரட்டிக் கொண்டிருந்தன. அவைகள் தான் எப்படிக் கவலையற்ற ஆனந்த வாழ்வு வாழுகின்றன! இன்பகரமான வாழ்வோடு ஆனந்தமாக எப்படி விண்ணிலே சிறகடித்துப் பறக்கின்றன? மனித வாழ்வில் மட்டும் ஏன் இடையூறுகளற்ற சுதந்திர வாழ்வு கிடைக்க மறுக்கிறது...?

பெருமூச்சு விட்டாள் விஜி.

'என்ன யோசிக்கிறாய் விஜி?'

'ஒன்றுமில்லை சுந்தர். கவலைகளை மறந்து காதல் வாழ்விலே ஈடுபட்டிருக்கும் அந்தப் புறுக்களைப் போல் ஏன் மானிட உயிர்களும் வாழக் கூடாது? தன்னைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு வட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வாழும் வாழ்வு என்ன வாழ்வு? ஒரு கணமாவது நிம்மதியான வாழ்வு கிடைக்கின்றதா? இல்லையே'

'அது மனிதர்களே செய்து விட்ட குற்றம் விஜி. உலகறிவு வளராமல் நாகரீகம் தெரியாத போது மனிதமனம் கள்ளங் கபடமற்று குழந்தை உள்ளம் போல் இருந்தது. அந்த மனத்தால் அன்பு வாழ்வு வாழமுடிந்தது; தெளிந்த வானிலே கவலைகளற்று பறவைகள் போல் ஆனந்தமாகச் சிறகடித்துப் பறக்க முடிந்தது. தேவைகளிருக்கவில்லை; அங்கே தேக்கமுமிருக்கவில்லை. வறுமையின் வாட்டம் இருக்கவில்லை. அதனால் சட்டமும் இருக்கவில்லை. அறிவு விசாலப்பட்டு நாகரீகம் பெருகிய வேளையில் தேவைகள் பெருகின. உழைப்புகள் குறுகின. குறுகிச் செல்லும் வாழ்விற்கு சட்டமென்ற அணை விழுந்தது. எப்பொழுது அணை விழுந்ததோ அப்பொழுதே அன்பு, பாசம், இன்பம் யாவும் அதற்குள் அடங்கி விட்டது. இயற்கையை வென்று விட்டதாக மனிதன் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அவன் தோற்று விட்டான். இயற்கை மனித வாழ்விற்கு காட்டும் தத்துவப் பாடம் இதுதான் விஜி' என்றான் சுந்தர்.

அவள் வியந்தாள்.

'அடேயப்பா! என்றையிலிருந்து ஞானம் பிறக்க ஆரம்பித்திருக்கிறது? வாழ்வைத் துறந்த நிலையில்தான் ஞானோதயம் பிறக்குமென்று சொல்லுவார்கள். வாழ்வின் முதற்படியிலேயே உங்களுக்கு ஞானம் முத்தி விட்டதோ? எனக் கூறி கலகலவென்று சிரித்தாள்.

'எல்லாவற்றிற்கும் நீதான் காரணம்' என்றான் அவன்.

'எப்படி?'

'பெண்ணின் கடைப்பார்வை தனைக் கண்டால் மண்ணில் மாமலையும் ஓர் கடுகாமோ! என்று பாடியுள்ளான் கவிஞன். பெண் பக்கத்திலிருந்


நிர்ணயிக்கப்பட்ட லாபமீட்டும் திட்டம்

தவணை முறைகளில் சேமிப்பதற்கும் லாபமீட்டுவதற்கும் வரையப்பட்டது

இலவச விபரங்கட்கு எழுதவும்:

**த பினான்ஸ் அன்ட் கறண்டி கம்பனி லிமிற்றட்**

தபால் பெட்டி இல: 1359

கொழும்பு.

## "மாணிக்கம் சந்தா விபரம்"

(தபாற் செலவு உட்பட)

இலங்கை

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூபா | 15.00 |
| ஆறு மாதச் சந்தா | ரூபா | 7.50 |

இந்தியா

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூபா | 17.00 |
| ஆறுமாதச் சந்தா | ரூபா | 8.50 |

மலேசியா

| | |
|---|---|
| வருடச் சந்தா | 10 டாலர் |
| ஆறு மாதச் சந்தா | 5 டாலர் |


தால் கவிதையும் வரும் தத்துவமும் பிறக்கும்' எனக் கூறிச் சிரித்தான் சுந்தர்.

'பெண்ணில் பெருந்தக்க யாவுள' எனக் கேட்டதும் இதற்காகத்தானோ?' கடைக்கண்ணால் நோக்கியபடி வினவினாள் அவள்.

'உண்மைதான்!' என்றவன் மனதில் பெண்ணைக் கொடிய நாகமென்றும், பயங்கரச் சுனையென்றும் வர்ணித்த சங்கரின் நினைவு வந்தது. அவன் சொன்ன பெண் கண் முன் வந்து நின்றாள். என்ன செய்வது. உலகில் இன்பமும் துன்பமும் எப்படி இணைந்துள்ளனவோ அப்படி நல்லதும் கெட்டதும் இருக்கத்தான் செய்யும். கொடிய வேதனையின் முடிவில் ஈடிணையற்ற இன்பத்தைக் காணும் தாய் அந்தத் துன்பத்தை வெறுத்து ஒதுக்கி விடுகிறாளா? இல்லையே.

'திருமணம் என்ற பந்தத்தில் ஈடுபடவில்லையென்றால் சில வேளை இந்தப் புறுக்களைப் போல் இன்பமாக வாழலாம் இல்லையா?' என்று கேட்டான் சுந்தர்.

'அது எப்படி சாத்தியமாகும்? திருமணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு புனிதச் சடங்கு. நாம் எப்படி கோயிலுக்குள் போகு முன் பயபக்தியோடு பாதணிகளை கழற்றி விட்டுச் செல்கிறோமோ அப்படி இல்லறத்துக்குள் நுழையும் முன் திருமணம் மூலம் பயத்தை ஒதுக்கி விட்டுச் செல்கிறோம். கோயிலுக்குள் பாதணிகளை அணிந்திருந்தால் எப்படி ஒரு அச்சவுணர்வும் அருவருப்பும் தோன்றுமோ அதைப்போல் திருமணசடங்கற்ற வாழ்வும் ஒரு கறைபடிந்த வாழ்வாகத் தோன்றும்.' என்றாள் விஜி,

'அப்படிப் பார்த்தால் மனிதர்களுக்குச் சுதந்திரமேயில்லை' என்றான் சுந்தர்.

'ஆமாம் திருமணமாகி விட்டால் குடும்பம், பொறுப்பு யாவும் வந்து விடும்தானே'

'அப்படியானால் பிரமச்சரியம்தான் உத்தமம்'

'அதற்கொன்றும் வாழ்வில் பற்றற்றுப் போகவில்லை. பின்னால் யோசிப்போம்.' என்றவள் 'நேரம் ஆகி விட்டது போவோம்' என்றபடி எழுந்து கொண்டாள். வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்காக கொண்டு வந்த பைல் கீழே கிடந்தது. சுந்தருடைய பைலும் கிடந்தது.

இருவரும் எடுத்துக் கொண்டு பூங்காவிலிருந்து வெளியேறினார்கள்.

வீட்டிற்கு வந்து பைலைப் பார்த்த சுந்தர் திடுக்குற்றான்.

காரணம் பைல் மாறி விட்டிருந்தது. சங்கர் கொடுத்தகடிதமுமல்லவா அந்தப் பைலில் இருந்தது.

—வளரும்—

# சோதிட சிந்தாமணி சு. விவேகானந்தன் அவர்களுடன் ஒரு பேட்டி

**கே. திரு. விவேகானந்தன் அவர்களே, உங்களுக்கு ஜோதிடக் கலையில் எப்படி நாட்டம் ஏற்பட்டது என்பதைச் சற்றுக் கூறுவீர்களா?**

ப. நான் பல தோல்விகளுக்குள்ளானேன். அதில் தெளிவு படுத்திய தற்குரிய வழி சோதிடத்திலிருந்து இதெளிவு பெற்றேன். அதனால் பல இன்னல்களைத் தவிர்த்துக்கொள்ளக் கூடிய இக்கலையை மிகவும் ஆசையுடன் கற்றுக்கொண்டேன்.

**கே. நீங்கள் பலாபலன்களைக் கூறும்பொழுது மனிதர்களின் குணதிசயங்களைத் துணைகொண்டு சொல்கிறீர்களா? அல்லது கால மாற்றங்களை அனுமானித்துக் கூறுகிறீர்களா?**

ப. ஒவ்வொரு மனிதர்களின் கால நேரத்தில் கிரகம் அமைந்திருப்பதைக் கொண்டு அறிந்து அதன்படி தற்கால கிரக அமைப்பையும் கொண்டு கணித்துப் பலன் சொல்லுகிறேன்.

**கே. தாங்கள் சர்வதேசப் புகழ்பெறக் காரணமாகவிருந்த ஜோதிடக் குறிப்புக்களின் விபரங்களைச் சற்றுத் தருவீர்களா?**

ப. 1972ம் ஆண்டு அமெரிக்காவுக்கு நடக்கவிருக்கும் பலனை முன் கூட்டியே எழுதி அதன்படி நடைபெற்றது. இந்தியா–பாகிஸ்தான் யுத்தம் உண்டாகியது. நம்பிரதேசத்திலுள்ள அரசியல் தலைவர்கள் மறைவு மாற்றங்களை முன்கூட்டியே தெரிவித்ததற்கு சர்வ தேசப்புகழ் கிடைத்தது.

**கே. தாங்கள் தமிழகம் சென்றிருந்தபோது தங்களுக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் தாங்கள் ஜோதிடக்கலையின் பெருமை பற்றி ஆற்றிய உரையைச் சற்று சுருக்கிக் கூறுவீர்களா?**

ப. சோதிடக் கலையை மற்றக் கலைகளைப்போல் எளிதில் அறிந்துவிட முடியாது. இக்கலையின் மூலம் பல ரிஷிகள், மகான்கள், குருமகா சந்நிதானங்கள் பல வழியை முன்கூட்டித் தெரிந்து வழிநடக்க வகுத்தனர். இக்கலையை ஆணித்தரமாக கற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையுண்டுபண்ணிய தமிழகத்தை மறந்துவிட முடியாது. எனது குருநாதராகிய காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம் அவர்களின் ஆசியுடன் மீண்டும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு கௌரவிக்கப்படுகிறேன். இத்தமிழகத்தில் சக்தி மிக்க இயக்கமான சோதிடக்கலையை போற்றி அதன்வழி நடப்பதையறிகிறேன். இதனால் இங்குள்ளவர்கள் நல்ல மதிப்பளிக்கிறதைக் கண்டு தமிழகத்திற்கு எனது பாராட்டுகள்.

**கே. பொதுவாக வாழ்க்கையில், எல்லோரும் கட்டாயமாக கடைப்பற்ற வேண்டிய ஜோதிட வாரியான விதிமுறை ஒன்றை சொல்வீர்களா?**

ப. பொதுவாக சோதிடத்தில் நம்பிக்கை கொண்டு அதன்படி கணவன் மனைவி தாம்பத்திய இன்பத்தை அனுபவிக்கும்போது எந்தக் கவலையும் பிரச்சனையும் கெட்ட எண்ணங்களையும் விட்டுவிட வேண்டும். இதில் கெட்ட காலநேரத்திற்குரிய தன்மைகளை குறைத்துக்கொள்ளக்கூடிய புத்திரர் ஜெனித்துப் பிறக்கும். ஆகவே கூட்டக் குறைக்கக்கூடிய தன்மை புத்திரர்களுக்குண்டு.

---


இது ஒரு மாணிக்கப் பிரசுரம்

29. கல்யாணி வீதி கொழும்பு. 6

ராசிபலன் 1975 - 76

ஒரு பிரதியின் விலை

ரூபா. 3-30

மாணிக்கம்
திங்கள் வெளியீடு
கல்:3 மே-ஜூன் 1975 ஒளி:2-3

# அரசினர் கவனிப்பார்களா?

ஈழத்தின் பொருளாதார நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்னும் விழிப்புணர்வு அரசினரிடமும் மக்களிடமும். ஏற்பட்டகாலகட்டத்திலேயே பிறந்த முதலாவது தீர்மானம் எமது வெளிநாட்டுச் செலவாணிபற்றிய தாகும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் இங்கு தயாராகும் வசதிகள் இருந்தால் வெளிநாட்டு இறக்குமதியைத் தடைசெய்வது, அல்லது கட்டுப்படுத்துவது,

வெளிநாட்டுப் பொருட்களுக்கு இணையாக உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கு ஊக்கம் அளிப்பது, மற்றும் உள்நாட்டு பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்துவது, ஊக்கமளிப்பது.

பத்திரிகை அல்லது நூல்வெளியீட்டுத்துறையைப் பொறுத்த வரையிலும் கூட இவை ஏற்றவை.

இக்கொள்கைகள் யாவும் கடைப்பிடிக்கப் படவேண்டும் என்னும் நோக்குடன் நமது அரசு நமது அத்தியாவசிய உணவுப் பொருட்களிலும் கூட தீவிர கட்டுப்பாட்டை விதித்தது. குழந்தைகளுக்குத் தேவையான பாலுணவுப் பொருட்களில் கூட அரசின் இத்தீர்மானம் பிரதிபலித்தது.

நாட்டின் பொருளாதாரம் சீர் பெறவேண்டுமென்ற காரணத்தினால் பாதிப்புக்களைக் கூடப் பொருட்படுத்தாது பல புதுவழிகளை கடைப்பிடித்தது. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அதன் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை செய்யாது வாளா இருப்பது வருந்தத்தக்கது,

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ச் சஞ்சிகைகளுக்காக நாம் பெருந் தொகையான அந்நிய செலவாணியை விரயம் செய்து வருகிறோம்.

தரத்திலும் அமைப்பிலும் ஈழத்தில், இந்தியச் சஞ்சிகைகளுக்கு ஈடான தொரு சஞ்சிகைகூட இல்லை என்ற காரணத்தால் இத்தடையை செயல்படுத்த முடியவில்லை என அரசின் சார்பில் வாதாடப்பட்டது.

ஆனால் இக்காரணத்தை முறியடிக்கவேண்டும் என்றநோக்கத்தினால் இரு வருடங்களுக்கு முன்பு மாணிக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இக்குறுகிய காலத்தினுள் மாணிக்கம் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் மலேசியாவிலும் கூட ஒருதரமிக்க ஏடு என வரவேற்கப்பட்டது.

ஆனால் மாணிக்கம் வளர்வதற்கு நமது அரசு என்ன விதத்தில் உதவி செய்தது?

மாணிக்கத்தின் தரம் எவ்விதத்திலும் குறையக்கூடாது என்னும் அவாவினால் இதுநாள் வரை நான் ஏறத்தாழ மூப்பத்தையாயிரம் ரூபாவரை நஷ்டப்பட்டுள்ளேன், ஈழத்தில் ஒரு தரமான மாத இதழ் வெளிவரவில்லை என காரணம் கூறும் எவராவது தரமான மாத இதழை வெளியிட்டு வரும் எனக்கு எந்த ஒரு உதவியையாவது அளிக்க முன்வந்தனரா? அதுதான் இல்லை.

இந்திய விற்பனையாளர்கள் ஐயாயிரம் பிரதிகளைக் கேட்டு எழுதியிருந்தும் எம்மால் ஐநூறு பிரதிகளைக்கூட அனுப்ப முடியாதவாறு இந்திய அரசு தடைவிதித்திருக்கிறது.

இது பற்றி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு நான் பல தடவைகள் கௌரவ அமைச்சர் திரு. குமாரசூரியர் அவர்களைச் சந்தித்தபொழுது எனக்குஎவ்வித உதவியும் கிட்டவில்லை. நீள்கடிதங்களைபடிப்பதற்கே தனக்கு அவகாசம் இல்லை எனஅலுத்துக் கொண்ட அமைச்சரை அணுகாது இந்திய அரசினருடன் நான் நேரடியாகவே தொடர்பு கொண்டேன். சந்தா மூலம் பெறவிரும்புபவர்கள் மட்டுமே அதுவும் தங்கள் உத்தரவுடன் பெற்றுக் கொள்ளலாமே தவிர ஈழத்து பத்திரிகைகளை இந்தியாவில் விற்பனைசெய்யமுடியாது என்னும் கருத்துடன் பதில் கிடைத்தது. நாம் இந்தியாவுக்கு அனுப்பும் மாணிக்கப் பிரதிகளுக்கான பணம் கூட வேண்டாம். அதற்குப்பதிலாக மாணிக்கத்தை வெளியிடத் தேவையான கடதாசி, மை போன்றவற்றையாவது தந்து உதவினால் போதுமானது என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அது கூட அவர்கள் காதுகளில் ஏறவில்லை.

அதுதான் வேண்டாம். அவர்கள் அனுப்பும் (குமுதம்) (விகடன்) போன்ற பத்திரிகைகளுக்குப் பதிலாக மாணிக்கப்பிரதிகள் ஒரு பகுதியையாவது பண்டமாற்றுச் செய்யலாமே!

இவை எதுவுமே நடைபெறவில்லை. நடைபெறும்சாத்தியக்கூறுகளும் இருப்பதாகத்தெரியவில்லை. இவ்வரசாங்கமும் இது பற்றி ஆவன செய்வதாக அறிகுறிகள் இல்லை, அரசாங்கம் எது செய்தாலும் வால் பிடிக்கும் பத்திரிகைகளுக்குமட்டுமே அரச கூட்டுத்தாபன விளம்பரங்களை வழங்கும் அரசுஅதேவேளையில் வெளிநாட்டு இதழ்களுடன் போட்டி போட்டு வரும் ஒரு இதழுக்கு ஒரு விளம்பரத்தையாவது தந்து உதவுகின்றதா?

தற்பொழுது உங்கள் கைகளில் தவழும் 'மதனன்' இதழால். மாதமொன்றுக்கு மட்டும் 800ரூபா நஷ்டமேற்படுகிறது.

'மாணிக்கம்' 'மதனன்' போன்ற 'வெளியீடுகளினால் ஏற்படும் நஷ்டத்தைப் போக்குவதற்காக நானும் எனது ஊழியர்களும் இரவு பகலாக வேலை செய்வது மட்டுமன்றி நான் கூட மாதாந்தச் சம்பளத்தில் இன்னொரு ஸ்தாபனத்தில் வேலை செய்ய வேண்டியுள்ளது.

ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாவை முதலீடு செய்தும் இந்த இரு இதழ்களையும் நேர காலத்திற்கு வெளியிடுவதற்கு போதிய அச்சுயந்திர சாதனங்கள் என்னிடம் இல்லை. உதாரணமாகஒரு கட்டர் மெசின் மாணிக்கத்திற்கு மிக அவசியம். இவற்றை யெல்லாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாதவாறு அந்நிய செலவாணி முட்டுக்கட்டையாக இருக்கிறது. தங்கள் வெளியீடுகளை எமக்கு விற்கும் பிறநாட்டு அரசாங்கம் எமது வெளியீடுகளையும் ஏற்றுக் கொண்டு எமக்குத் தேவையான உபகரணங்களையாவது தந்து உதவலாமே!

ஈழத் தமிழ் இலக்கியம் வளரவேண்டுமென்ற அவாவினால் அவ்வப் போது பல அறிக்கைகளும் தீர்மானங்களும் எழுவதும் மறைவதுமாக இருந்து வருகின்றன, அவையெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள் தான் என்பதை வாசகர்களும் அறிவர். நாமும் அறிவோம்.


உதாரணமாக ஈழத்து எழுத்தாளர் ஒன்றியம் என்னும் அமைப்பு சில ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது, பெரும் தீர்மானங்கள் இவ்வமைப்பில் எழுந்தன. பெரும் எழுத்தாளர்கள் யாவரும் இதில் அங்கத்துவம் வகித்தனர். ஆனால் ஈழத்தில் இருந்துவரும் நியதியின் படி இவ்வமைப்பு தோன்றிய வேகத்திலேயே மறைந்தது.

இவர்களது சென்றஆண்டு மகாநாட்டின் போது கூட மாணிக்கம் புறக்கணிக்கப்பட்டது, இவற்றையெல்லாம் ஏன்சொல்கிறேனென்றால் ஈழத்து இலக்கிய மேடை எவ்வளவு தூரம் கேலிக்கிடமாகவும் பலவீனமுள்ளதாகவும் இருந்து வந்திருக்கிறது என்பதை வாசகர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே!

மாணிக்கம் தனது ஆரம்பகாலம் தொடங்கி இன்று வரை தன்நிலை தளராமல் வளர்ந்தது மட்டுமன்றி மதனன் என்ற சிறுவர் மாத இதழையும் மாணிக்கப் பிரசுரங்களையும் தோற்றுவித்திருக்கிறது.

இப்பெருமையை மாணிக்கம் நிறுவனமும் வாசகர்களும் மட்டும் கொண்டாடினால் போதாது. அரசும் அக்கறை செலுத்துவதன் மூலம் தான் அதுஇலக்கியத்தின் மீதுகொண்டிருக்கும் அக்கறையை வாசகர்களும் அறிந்து கொள்வர்.

— ஆசிரியர்



# மாணிக்க மடல்கள்

அன்புள்ள மாணிக்கத்திற்கு எனது உள்ளம் கனிந்த அன்புவாழ்த்துக்கள் உரித்தாகுக. முதன் முறையாக சித்திரைமாத மாணிக்க இதழில் எனது பெயர் பிரசுரிக்கப்பட்டிருப்பது கண்டு அகமகிழ்தேன். இதேபோன்று ஒவ்வொருவரின் தரமான படைப்புக்களையும் தங்கு தடையின்றி பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இரண்டாவது வயதை தாண்டிக்கொண்டிருக் கும் என்மாணிக்கமே நீ தடையின்றி மாதந் தோறும் வெளிவரவேண்டும் எனமனதார வாழ்த் துகின்றேன்,

நுவரெலியா -திருச்செல்வம்

சித்திரை மாத மாணிக்க இதழில் முத் திரை பதித்தாற்போன்று பல முத்தான விடயங்களை வெளியிட்டு எம்மை கவர்ந்து விட்டீர்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் கே. எஸ். ஆனந்த னின் கனலும் புனலும் தொடர்கதையின் முதல் அத்தியாயமே என்னைக் கவர்ந்து விட்டது .ஏனைய அத்தியாயங்களும் சிறப் பாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தே கமும் இல்லை.

இளம் எழுத்தாளர்களுக்கு 'களம்' அமைத்துத்தந்த மாணிக்கம் தற்போது நாடு பூராவிலும் 'கழகங்களை' அமைக்க முன்வந்திருப்பது நல்லதோர் முயற்சி. இதன் மூலம் மாணிக்கம் மென்மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பதில் எவ் வித சந்தேகமும் இல்லை.

கல்முனை, முஹம்மதுஹஸனி

அன்புள்ள ஆசிரியருக்கு சித்திரை ஆண்டு மலரில் வெளி வந்த விஜயா நடராஜாவின் 'யார் தவறு' என்ற சிறுகதை மலையகச் சூழலை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இப்படியான சிறு கதைகளை தொடர்ந்து வெளி யிடுங்கள்.

மஸ்கெலியா

- சந்திரலெட்சுமி

சித்திரைப் பொன்னுளில் எழில்கோலம் மனதைக் கொள்ளை கொள்ள செய்தது. கனலும் புனலும் சரித்திர தொடர்கதை ஆரம்பமே விறுவிறுப்பாக உள்ளது.

மேலும், சித்திரை இதழில் நினைவுஅலை கள்கட்டுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள படங் கள்தெளிவாக இல்லை.கருமை படர்ந்துள் ளது. வேறுபடங்களும் தெளிவில்லாமலே இருக்கிறது. இதைக்கவனத்திற் கொள் ளவும். கடல்தாரகை தொடர் நவீனம் சப்பென்று உள்ளது.

கொழும்பு-12 -எஸ். பாத்திமாடீன்

சித்திரைமாத இதழ்-தித்திக்கும் தேன்சுவை யாக இருந்தது. திருமதி விஜயா நடராஜாவின் யார்தவறு' என்ற சிறுகதை என்கண்களில் நீரைவரவழைத்துவிட்டன,

தளவாக்கெலை -கனகேஸ்வரிபிச்சை

பங்குனி இதழ் கண்டேன் பரவசம் மிகக் கொண்டேன்- பலதரமான ஆக்கங்களிடை யேஎன்னைக்கவர்ந்தது'இருளகற்றியஇறை தூதர்' என்ற அம்சம்தான். எந்தமத விஷேடங்கள் வந்தாலும் அதைபற்றிய கட்டுரையை அந்ததினத்திற்குப் பொருத் தமாக வெளியிடுவதில்தான் மாணிக்கத் தின் புகழ் மலையென உயருகிறது.

மன்னூர் -கே. என. ராகிவா

1-5-75 ல் வெளிவந்த மாணிக்கத்தில் பிரசுர மாகியிருந்த கடல் தாரகையை படித்தேன். அதையும் அதைவெளியிட்ட மாணிக்கத்தையும் என்னால் மறக்கமுடியவில்லை. எனவே மாணிக்கத் துக்கும் கடல்தாரகை ஆசிரியருக்கும் எனது உளம் கனிந்தவாழ்த்துக்கள்.

கல்முனை -ஹசனுல்முபாறக்

## நான்கு: கருணை

மௌனமாய், தேர் நகர்ந்து கொண்டிருந்தது.

ஆடம்பரமான வாழ்த்தொலிகள் இல்லை. அநாவசிய அலங்காரங்கள் இல்லை. அளவுக்கதிகமான ஆடம்பரங்களும் இல்லை.

வள்ளல் பாரி வசந்தகாலப் பொலிவோடு தேர் ஏறி நகர் வலம் சென்று கொண்டிருந்தான்.

கேட்பவருக்கு இல்லையென இதுவரை கூறியிராத வேந்தன் பாரி "இங்கு வாழும் மக்கள் இன்பமுடன் இருக்கின்றனரோ...? நகரத்திலுறைவோர் நலமுடன் வாழ்கின்றனரோ...?" என்று உண்மைதனை அறிந்துவிட அமைச்சர் பெருமக்கள் புடைசூழ உலா சென்று கொண்டிருந்தான்.

தேர் நகர்ந்து, தெரு வீதி கடந்து, வசந்த மண்டப வழியாக அரண்மனை நோக்கி அசைந்தாடி வந்து கொண்டிருந்தது.

அங்கோர் இடத்தில் இளம் முல்லைக் கொடியொன்று துணையில்லா வேதனையால் துவண்டு நிலம் புரண்டிருந்தது. தேரை நிறுத்தி இறங்கி நின்று நோக்கினான் நிலவேந்தன் பாரி.

அந்தோ பரவம்' என அவனுள்ளம் 'கருணை'க் குரல் கொடுத்தது.

தேர் அதனை இழுத்து வந்து தெருவோரம் நிறுத்தி வைத்தான்.

துவண்ட முல்லைக் கொடியதனை தூக்கி கையில் எடுத்தவன் தேர்க்கால் ஒன்றோடு அதை இணைத்து வைத்தான்.

முல்லைக்குத் தேரீந்து முழுநிறைவு பெற்றவன்' கருணை' பொங்கும் உள்ளத்தோடு கால் பதித்து நடந்து சென்றான்.

அடுத்த இதழில் - 'சாந்தம்' — குமார் —

---

'நவரசம்' பகுதிக்கு எழுத விரும்புபவர்கள் மாணிக்கம் இதழில் ஒரு பக்கத்துக்குள் அடங்கக் கூடியதாக, சுவையான விஷயங்களை தொகுத்து அனுப்புங்கள்.

தரமானவைகள் நிச்சயம் பிரசுரமாகும்.

ஒன்பது ரசனைகளுக்கும் தனித்தனி அம்சங்களாக எழுதி அனுப்புவது அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

'நவரசம்' 29, கல்யாணி வீதி, கொழும்பு-6.

பரபரப்புடன் விற்பனையாகிறது!




மாணிக்கப் பிரசுரம்

உள்ளூர் விற்பனையாளர்களிடம் உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பக்கங்கள் 120 விலை ரூ. 3-40


---

இவ்விதழில் வெளியான கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு ஆகியவற்றுக்குப் படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். கதைகளைக் கூட்டி, குறைத்து திருத்திப் பிரசுரம் செய்வதற்கு ஆசிரியர் குழுவுக்குப் பூரண உரிமையுண்டு.


மதுராபப்பிளிக்கேசன்ஸ் சார்பில் கொழும்பு - 13, ஸ்ரீ கதிரேசன் வீதியிலுள்ள மாணிக்கம் பிறிண்டேஸி'ல் 'மாணிக்கம்' மாத இதழை அச்சிட்டு, வெளியிடுபவர் திருமதி. சரோஜினி கைலாசபிள்ளை B.Sc. (Cey.) 29, கல்யாணி வீதி, கொழும்பு-6.

Registered as a Newspaper in Sri Lanka. 'Manickam' Tamil Monthly Magazine May-June '75
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 95 மலேசியா காசு


என்றும் வெற்றிப்படங்களையே உங்களுக்கு அளிக்கும்

(பல நவீன வசதிகளுடனமைந்த)

## ஈரோஸ் தியேட்டரில்

(பாமன்கடை, வெள்ளவத்தை)

வெற்றி முரசுகொட்டி ஓடிக்கொண்டிருக்கிறது.



மக்கள் திலகம் புன்னகை அரசி மேஜர்

**எம். ஜி. ஆர், கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்**

அசோகன், நாகேஷ், குமாரி சச்சு

மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ்

# நல்ல நேரம்

டைரக்ஷன்:

M. M. A. திருமுகம்